திருமுருகாற்றுப்படை

3-5

நக்கீரர்

இயற்றிய

திருமுருகாற்றுப்படை மூலமும்

தை. ஆ. கனகசபாபதி முதலியார்

இயற்றிய

பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

ஜார்ஜ் டவுன், சென்னை

திப்புரிமை] 1937 [விலை அணா 5

முகவுரை

முன்னாள் நந்தமிழ் மொழியை வளர்த்த அறிவு சான்ற புலவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து, அறம் பொருள் இன்பம் பயப்பனவாய் இலகிய நூல்களைப் பெரியோர் கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என இருபாலாக்கினர். அங்ஙனம் பிரித்ததன் பயனாய், 'பத்துப் பாட்டு'ம் 'எட்டுத் தொகை'யும் மேற்கணக்குள் அடங்கின. பத்துப் பாட்டு என்னும் நூல் படிப்போர் மனத்தைப் பண்படுத்தும் இயல்பிற்றாய், பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகத்தை அறிவிப்பதாய், பத்து அகவற்பாக்களைக் கொண்டதாய் விளங்குகின்றது. 'அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே' என்னும் இலக்கணம்பற்றி, மிக்க அடிகளைக் கொண்ட பத்துப்பாக்களையுடைய இந்நூல் பத்துப் பாட்டு என்னும் பெயர் பெற்றது. இந்நூல் மிகவும் சிறப்புடையதெனினும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய உரை விளக்கமின்மையின், இதனைப் படிப்போர் மிகச் சிலராயினர்.

இதனுள், 317 அடிகளைக்கொண்டது 'திருமுருகாற்றுப்படை'. இந்நூலை இயற்றியவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவரும், நெடுநல்வாடை, இறையனார் அகப்பொருள் உரை முதலியன எழுதியவரும் ஆகிய நக்கீரர் என்று சிலரும், நக்கீரதேவநாயனார் என்று

வேறு சிலரும் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் நக்கீரரையே நக்கீரதேவநாயனுர் என்று பின்னையோர் வழங்கினர் எனக் கருதுகின்றனர். இம்முத்திறத்தோர் உரைகளைக் கொண்டு யான் ஈண்டோர் ஆராய்ச்சி எழுதப்போவதில்லை. ஏனெனின், இவ்வாராய்ச்சியால் பெற நிற்கும் பயனும் சிறிதே. திருமுருகாற்றுப்படை என்னும் பெயரிய இந்நூல் முருகன்பால் பேரன்புடைய ஒருவரால் எழுதப்பெற்றதென்பதை எவரும் மறுத்தல் இயலாது. இந்நூலாசிரியர் நக்கீரராய் இருப்பினும், நக்கீரதேவநாயனுராய் இருப்பினும், இந்நூல் நிலையில் நமக்குக் கிடைக்கும் பயன் ஒன்றே.

(முருகன் அருள் பெற்ற ஒரு புலவன் அவன் அருள் பெறுதற்குரிய வேறொரு புலவனை) முருகப் பெருமானிடத்தில் செலுத்துதல் என்பதே 'திருமுருகாற்றுப்படை' என்னும் தொடர்க்குப் பொருள். ஆனல் இத்தொடர்க்குப் பத்துப் பாட்டினுள் காணப்படும் மற்ற ஆற்றுப்படைகளின் தலைப்புக்களுக்குப் பொருள் கூறுவது போலக் கூறின், திருமுருகனைச் செலுத்துதல் என்றே பொருள் கூறல்வேண்டும்.

'செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே'

எனவும்,

'ஆண்டாண் டாயினும் ஆக காண்தக
முந்நீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி'

எனவும் வரும் அடிகளால் இவ்வுரை கொள்ளுதற்கிட னில்லை.

நூலுள் 244-ஆம் அடியில் வரும் 'முருகாற்றுப் படுத்த' என்னும் தொடரே இந்நூற்பெயருக்குக் காரணமாயிற்று எனக் கொள்வர் சிலர். இதனைப் 'புலவ ராற்றுப்படை' என வழங்குவாரும் உளர்.

ஆசிரியர் செய்யுளாம் திரையில் சொற்களாம் வரு ணம்கொண்டு தீட்டிய படங்கள் ஓவிய உணர்ச்சியுடை யார்க்குப் பெருவிருந்தளிக்கும். திருவாவினன்குடி என்னும் தலைப்பின்கீழ் அமைந்த அடிகளால் அவர் அமைத்த படத்தினை ஈண்டுக் காண்போம் :

முருகப்பெருமானால் நான்முகன் சிறை செய்யப் பட்டான். அந்நான்முகற்கு விடுதலையளிக்குமாறு முரு கப்பெருமானை வேண்டும் பொருட்டுத் திருமால், அரன், இந்திரன் ஆகிய மூவரும் முனிவர், கந்தருவர், பதினெண் கணங்கள், தேவர்களோடு திருவாவினன் குடியாகிய பழனியை நோக்கிச் செல்லலாயினர்.

இச்செய்தியை அமைத்து ஓவியன் ஒரு படம் எழுதத் துணிவானாயின், அவன் திருமால் அரன் இந் திரன் ஆகிய இவர்கள் உருவங்களைப் படத்தின் நடுப் பாகத்தில் அமைப்பான் ; அம்மூன்று உருவங்களையும் வரிசைப்படுத்தும் முறையில், சிவபெருமான் உருவத் தைத் திருமால் உருவத்திற்கும் இந்திரன் உருவத்திற்

கும் நடுவில், தலைமை நோக்கியும் நிறம் நோக்கியும் அமைப்பான். நீலநிறம் பொருந்திய திருமால் உருவிற்கும், ஆயிரம் கருவிழிகளின் தோற்றத்தால் பெரும்பாலும் கருநிறமுடையனுய்த் தோன்ற வல்ல இந்திரன் உருவத்திற்கும் இடையில் உருக்குப் பொன் மேனியனும் சிவபெருமானின் உருவம் அமையின், படம் பெரிதும் பாடுறும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இம்மூவர் உருவங்களும் காண்பவர் கண்களைக் கவரும் வண்ணம், மற்றவர் உருவங்களை முன்னும் பின்னும், வனப்பு நிலையிலும் வருண நிலையிலும் அவன் குறைத்து எழுதுவன்; ஆடவரும் பெண்டிருமாய்க் கூடிய கந்தருவ உருவங்களைத் திருமால் உருவத்திற்கு ஏற்றம் தரவேண்டி அவர் உருவத்திற்கு முன் அமைப்பான். அவர்கள் வருகையினைக் குறிக்கும் இப்படத்தின் முதலிலும் முடிவிலும் அமைகின்ற உருவங்கள் காண்போர் மனத்தைப் பெரிதும் கவருதல் கூடாது. அதிலும், கடைசியில் வருவார் உருவங்களை உறுப்புக்களின் பாகுபாடு தோன்று வண்ணம் அமைத்தல் வேண்டும். ஆகலான், கணங்களும் தேவர்களும் கூடி வேகமாய் வந்த கூட்டத்தை இறுதியில் இந்திரனுக்குப் பின் அமைப்பன். கந்தருவருக்கு முன், அதாவது பூமியை நோக்கி வரும் இவர்கள் எல்லோர்க்கும் முன், மாவுரி அணிந்து, என்பு எழுந்து இயங்கும் யாக்கையினராய் விளங்கிய முனிவர் உருவங்களை அமைப்பான்.

இவ்வண்ணமே ஆசிரியர் நக்கீரரும் செய்யுளாம் திரையில் சொற்களாம் வருணம் கொண்டு எழுதிய

நிலையைக் கூர்ந்து நோக்குக. இவ்வமைப்பு ஓவியன் முதலில் அமைத்துக்கொள்ளும் பொது அமைப்பே யாகும். இனி, அவன் ஒவ்வோர் உருவத்தையும் அமைக்கும் சிறப்பமைப்பினை இங்குக் கூறப்புகுவேனா யின் முகவுரை பெருகுமாதலானும், ஓவிய உணர்வு பெரிதுமுடையார்க்கன்றி ஏனையோர்க்கு விளங்காதாக லானும் அதனைக் கூறாது விடுகின்றேன். இச்சிறப்பமைப் பும் ஆசிரியர் படைத்த பாட்டோவியத்தில் அமைந் திருத்தலைக் கூர்ந்து நோக்குவார் காணல் இயலும்.

இது போன்றே மற்றப் படைவீடுகளிலும் ஆசிரி யர் பல படங்களைப் படைத்துள்ளார். ஒரு முறை அமைந்த சொல்லும் தொடரும் பல முறை வருகின் றமையாலும், மூலம் பல இடங்களில் சிதைவுற்று இருக் கின்றமையாலும், காவிய உணர்ச்சி பெரிதுமுள்ள ஆராய்ச்சியாளர் சிலர்க்கு இந்நூல் இன்பம் அளிப்ப தொன்றாய் இல்லை. காவிய உணர்ச்சி பெற்ற இவ் வாராய்ச்சியாளர் ஓவியக் கண்கொண்டு இந்நூலை நோக் குவாராயின், ஆசிரியரால் படைக்கப்பெற்ற முருகப் பெருமான் திருவிளையாடற் படங்களை வியவாமற் போகார்.

ஆதலின், யான் முருகன்பால் பேரன்புடையார்க்கு அவன் திருவிளையாடல்களைக் குறிக்கும் பாட்டோவியங் கள் நன்கு விளங்கவேண்டுமென்னும் கருத்தால், பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும் வரைந் துள்ளேன் ; செய்யுட்களைப் படித்தலில் பயிற்சி அற்ற

வரும் இந்நூலைப் பிழையின்றி ஓதும் விதம் பல இடங்களில் மூலத்தைச் சந்தி பிரித்து அச்சிட்டுள்ளேன்.

இந்நூலுக்கு மதிப்புரை எழுதியுதவிய 'நவசக்தி' ஆசிரியர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு என் வணக்கம் உரியதாகுக.

சென்னை,
6—4—1937.

தை. ஆ. க.

மதிப்புரை

இறைவன் ஒருவனே. ஒரே இறைவனுக்குப் பல மொழியில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவை. களில் ஒன்று முருகன் என்பது.

முருகை உடையவன் முருகன். 'முருகு' என்பது அழகு, இளமை, மணம், தெய்வத்தன்மை முதலிய பல பொருளேக் கொண்டது.

முருகனுக்குரிய நிலே மூன்று. ஒன்று எல்லா வற்றையுங் கடந்தது. இன்னென்று எல்லாவற்றிலுங் கலந்தது. வேருென்று சான்றவருள்ளத்தில் சிறந்து விளங்குவது. இம்மூன்றனுள் பின்னேய இரண்டும் வழி பாட்டுக்குரியன ; ஓவியர்க்கு விருந்தாவன.

எல்லாவற்றிலுங் கலந்ததென்பது முருகனது இயற்கை நிலே. இயற்கை நிலேயாவது, முருகன் இயற் கையை உடலாக் கொண்டு தான் உயிராக நிற்பது. முரு கன் சான்ருேர் உள்ளத்தில் சிறந்து விளங்குவது அவ னது குரு நிலேயாகும்.

வழிபாடுகள் பல திறத்தன. அவைகளுள் சிறந்த ஒன்று ஓவியத்துறை. ஓவியம், புலவன் உள்ளத்தினின் றும் அரும்பி மலர்வது. ஓவியத்துக்கு முதல், இயற் கைப் பாட்டு.

இயற்கையெல்லாம் பாட்டே. செஞ்ஞாயிறும், வெண்டிங்களும், உடுக்கணமும் பாட்டேயாகும். மலேக் குலமும், காட்டுச் செறிவும், வயல் வளனும், அலேகட

லும் பாட்டல்லவோ ? பளிங்கருவி பாட்டாகவன்றோ ஓடுகிறது ? நீர் நிறைந்த ஏரி எக்காட்சி வழங்குகிறது ? பாட்டுக்காட்சியன்றோ ? கமலமும் நீலமும் பூத்துள்ள சுனை பாட்டாகவே திகழ்கிறது. குயிலின் குரலிலும், மயிலின் நடத்திலும், மானின் நடையிலும் பொலிவ தென்னை ? பாட்டன்றி வேறென்னை ? நல்லரவு படம் விரித்தாடுகிறது. அவ்வாட்டிலும் பாட்டொளியே கால் கிறது. பெண்ணையும் குழந்தையையும் பாட்டென்று சொல்லவும் வேண்டுமோ ? இவ்வியற்கைக் கூறுகளுக் கெல்லாம் உயிராயுள்ள முருகனும் பாட்டே. உலகு உயிர் கடவுள் எல்லாம் பாட்டு–பாட்டேயாகும். பாட்டு யாண்டில்லை ?

இயற்கைக் கூறுகள் புலவன் உள்ளத்தில் படிந்து ஒன்றுகின்றன. அவை ஒன்ற ஒன்ற அவையிற்றின் பண்புகளால் உள்ளத்தில் இயற்கை இன்பம் பிறக் கிறது. அவ்வின்பம் கிளர்ந்தெழுகிறது. அவ்வெழுச்சி, உள்ளத்தில் அடங்காது பெருகிப் பொங்கி வழிகிறது. அதனூடே ஒன்றிய இயற்கைக் கூறுகளும் வெளி வரு கின்றன. அவை மற்றவர்க்குப் பயன்படும் பொருட்டுப் புலவன் சொல்லணியால் அவைகளைத் தேங்கச் செய்கி றான். அத்தேக்கமே பாட்டோவியம் என்பது.

முதல், இயற்கைப் பாட்டு. விளைவு, பாட்டோவி யம். பாட்டோவியம் ஈன்ற சேய்கள் பல.

நக்கீரனர் ஒரு புலவர் ; தமிழ்ப்புலவர் ; இயற் கைப் புலவர். அவரிடத்திருந்து ஓரழகிய பாட்டோவி யம் முகிழ்த்தது. அதுவே திருமுருகாற்றுப்படை.

திருமுருகாற்றுப்படை ஒரு சிறந்த பாட்டோவி யம். அவ்வோவியத்துக்குப் பொருந்திய முறையில் கோயிலெடுக்கப்பட்டது. அக்கோயிலுள் நுழைவோர் பலர். அவருள் பெரும்பான்மையோர் சொல்லடுக்காஞ் சுவர் கண்டு திரும்புவர்; நுண்ணிய ஓவியம்வரைச் செல்வோர் சிலர்; ஓவியத்தில் ஒன்றி முருகை வழிபடு வோர் மிகச்சிலர்.

திருமுருகாற்றுப்படை ஒன்றையே ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கொள்வர். அவரவர் அறிவுத் திறத்துக்கு ஏற்ற முறையில் திருமுருகாற்றுப்படை காட்சியளிக்கும்.

ஓரழகிய மரம் பசுமை பொழிந்து தழைத்து நிற் கிறது. அதை ஒரு தாவரன் பார்க்கிறான்; ஒரு பாவலன் நோக்குகிறான்; ஒரு விறகு வெட்டியுங் காண் கிறான். தாவரன் மரத்தின் கூறுகளையும் இயல்களையும் ஆய்ந்து தெளிவடைகிறான். பாவலன் மரத்தின் வனப் பில் ஒன்றி அதைப் பாட்டோவியமாக வடித்துச் செல் கிறான். விறகு வெட்டி என் செய்யப் புகுகிறான்? மரம் ஒன்றே மூவர்க்கும் மூவித விருந்தளித்தது. திருமுரு காற்றுப்படையின் காட்சியும் இத்தன்மைத்தே.

நண்பர் தை. ஆ. கனகசபாபதி முதலியார் திரு முருகாற்றுப்படைக்கு ஓர் இனிய உரை கண்டுள்ளார். திரு. முதலியார் ஓவிய வழியில் வந்தவர்; பிறவியில் ஓவிய இயல்பு வாய்ந்தவர்; ஓவியம் நன்முறையில் பயின்றவர்; பலதிற ஓவியம் அமைத்துப் பண்பட்ட வர். இத்தகைய ஒருவரால் காணப்பெற்ற உரையில் நக்கீரனார் ஓவியம் புலனாதல் இயல்பன்றோ?

திரு. கனகசபாபதியார் முருகாற்றுப்படைக் கோயிலில் புகுகிறார். சொல்லடுக்குச் சுவர்கள் புலனாகின்றன ; உள் நுழைகிறார் ; பொருட்படிகள் குறுக்கிடுகின்றன ; அவைகளைத் தாண்டுகிறார் ; இலக்கணத் திரைகள் மறிக்கின்றன ; அவைகளையுங் கடக்கிறார் ; மேலுஞ் செல்கிறார் ; சென்று சென்று நக்கீரனாரைக் காண்கிறார். நக்கீரனார் தமது ஓவியத்தைப் புலப்படுத்துகிறார். ஓவியம், திரு. முதலியார் நெஞ்சைக் கவர்கிறது. அவர்தம் நெஞ்சம் ஓவியத்தில் உறைந்து உறைந்து நிற்கிறது. .அவ்வுறைவிடை முருகின் கோலு புலனாகிறது. அன்பர் கனகசபாபதியார் முருகைத் தமிழ் மலரால் வழிபடுகிறார். திரு. முதலியார் உழைப்பு அதிகம். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?

தாம் கண்ட ஓவியக் காட்சியைத் திரு. முதலியார் முகவுரையில் சுருங்கிய மொழியால் இனிதாகப் பொறித்துள்ளார். அஃது அறிஞர் கருத்தை ஈர்க்கும்.

திரு. கனகசபாபதி முதலியார் ஓவியப் புலமையுடன் காவியப் புலமையும் பெற்றவர். அவர் தமிழ் ஆரியம் ஆங்கிலம் பயின்று தெளிவடைந்தவர் ; பழந் தமிழ் அமிழ்தை இனிது உண்டவர். அவர்தம் மும்மொழிப் புலமை தற்காலக் கண்கொண்டு நக்கீரனாரை நோக்குதற்குக் கருவியாக நின்று துணை புரிந்துள்ளதை இப்பேருரைக்கண் காணலாம்.

திரு. முதலியார் உரை, தெளிவுடையது ; இனிய எளிய நடையுடையது; ஐயப்பாடுகளையும் சிக்கல்களையும் அறுத்துள்ள பெருமை வாய்ந்தது ; ஆசிரியர் துணையின்றி நூலைப் பயிலுதற்குரிய விளக்கங்களைக் கொண்

டது ; நூலின் உள்ளுறையைக் கலங்கரை விளக்கம் போல் நின்று உணர்த்த வல்லது. நூலின் ஓவியமும் உள்ளமும் உரையில் விளங்குகின்றன. 'இத்தகை உரை இதுகாறும் வெளிவரவில்லை' என்று கூறல் மிகை யாகாது.

நக்கீரனார் எடுத்த திருமுருகாற்றுப்படை என்னுந் தமிழ்ப்பாட்டோவியக்காட்சிக்குத் திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார் வடித்த இவ்வுரை ஒரு பெருந் திறவுபோல் துணை செய்ய வல்லது என்று சுருங்கச் சொல்கிறேன்.

ஓவிய உரை இற்றை ஞான்று வேண்டற்பாலது. அதற்குத் துணைபுரிந்த நண்பர் திரு. கனகசபாபதி முதலியாருக்கு எனது நன்றி உரியதாக.

தமிழ் வாழ்க ! ஓவியம் வாழ்க !

திரு. வி. க.

உ
கடவுள் துணை

திருமுருகாற்றுப்படை

1. திருப்பரங்குன்றம்

(பொருட்சுருக்கம்)

உலகத்திலுள்ள உயிர்கள் மகிழும்படி மேரு மலையை வலமாகச் சுற்றிவரும், பலராலும் புகழப்படுகின்ற சூரியன் கீழ்க்கடலிலே காணப்பட்டாற் போன்ற ஒளியையும், தன்னை வந்து அடைந்தாரை ஆட்கொள்ளும் வலிய அழகிய பாதங்களையும், பகைவர்களை அழித்த இடியன்ன ஆற்றல் அமைந்த அகன்ற கைகளையும் உடையவன் குற்றமற்ற கற்பினையுடைய தெய்வயானையின் கணவனாவான்.

கடல் நீரை உண்டு கருக்கொண்ட கரிய மேகங்கள், சூரியனும் சந்திரனும் இருளை நீக்குகின்ற ஆகாயத்திலே நின்று பெரிய துளிகளைச் சிதறி முதன் மழையைப் பெய்து விட்ட நறுந்தண் காட்டிலே, இருளுண்டாகும்படி தழைத்த பருத்த அடிப்பாகத்தையுடைய வெண்கடம்ப மரங்களில் தோன்றிய உருண்ட பூக்களாலாகிய மாலை அம்முருகன் மார்பில் புரண்டுகொண்டிருக்கும்.

'கிண்கிணி' என்னும் அணி சூழ்ந்து ஒளிபொருந்திய செம்மையான சிறிய அடியினையும், திரட்சிபெற்ற காலினையும், துவளுகின்ற இடையினையும், மூங்கில்

போலும் தோளினையும், இந்திரகோபம் என்னும் பூச்சியின் நிறத்தைப் போன்ற நிறத்தையுடைய சாயம் தோயாத புடைவையினையும்,பல இரத்தினங்கள் வரிசையாகக் கோக்கப்பெற்ற சில வடங்களைக் கொண்ட அல்குலினையும், ஒருவர் கையினால் அலங்கரித்தலைப் பெறாத இயற்கை அழகினைப் பெற்ற அழகினையும், 'ஜாம்பூநதம்' என்னும் பொன்னால் செய்யப்பெற்ற ஒளி வீசும் அணியினையும், உடல் நிறத்தையும் உடைய சூர் அரமகளிர் பலர் கூடி(த் தமக்குள்) பெரிய மூங்கில்கள் வளர்ந்துள்ள மிகவும் உயர்ந்த மலைகளில், தாதியர் ஆராய்ந்த நுனிகள் சமமான பசப்புள்ள கூந்தலில், சிவந்த காம்பினைக் கொண்ட வெட்சி மலர்களினுடைய சிறிய இதழ்களின் நடுவில், பசுமையான தாளினைக் கொண்ட குவளை மலரினுடைய பரிசுத்தமான இதழ்களைக் கிள்ளி இட்டு, 'சிதேவி', 'வலம்புரி' என்னும் தலையணிகளைத் தகுந்த இடத்தில் வைத்து, பொட்டு அழகுசெய்த வாசனை வீசுகின்ற அழகிய நெற்றியில், சுறாமீனின் பிளவுபட்ட வாய்போலச் செய்த அணி தொங்கும்படி அலங்கரித்து, செய்யவேண்டிய அலங்காரங்களை முற்றிலும் செய்துமுடித்த குற்றமற்ற கொண்டையில், பெரிய குளிர்ந்த சண்பகப் பூக்களைச் செருகி, கருமையான புற இதழ்களையும் அகத்திலே அழகிய இதழ்களையும் உடைய பூக்களைக் கொண்ட மருதின் ஒளி பொருந்திய கொத்துக்களை அதன்மேலிட்டு, செந்நிற அரும்புகளைக் கொண்டு கட்டப்பெற்ற மாலையை வளைத்து, ஒரே அளவாகக் காதுகளில் செருகப்பெற்ற அசோக மரத்தின் ஒளி பொருந்திய தளிர், நுட்பமான வேலைப்பாடு

அமைந்த அணிகளைக் கொண்ட மார்பிலே அசைய, திண்ணிய வயிரத்தையுடைய மணமுள்ள சந்தனக் கட்டையைத் தேய்த்ததனுல் உண்டாகிய அழகிய நிறத்தையுடைய குழம்பை, வாசனை வீசுகின்ற மருதப் பூவை அப்பினுற் போல, கோங்கின் குவிந்த அரும்பை யொத்த இளமுலைகளிலே அப்பி, அந்த ஈரம் வாடு தற்கு முன்னே, விரிந்த மலரையுடைய வேங்கைப் பூவினது நுண்ணிய மகரந்தப் பொடியை அவைகளின் மேலிட்டு, பின்னும் அழகு தோன்றும்படி விளா மரத் தின் சிறிய தளிரை அவைகளின்மேல் கிள்ளித் தூவி, 'வெற்றி மிக்க கோழிக்கொடி நெடுங்காலம் வாழ்வதாக!' என்று துதித்து, சிறப்பு மிக்க மலை இடமெல்லாம் ஒலிக்கப் பாடி ஆடும் சோலையில், குரங்குகளும் ஏறி அறியாத மரம் நெருங்கிய பக்க மலையிலேயுள்ள, வண்டு களும் மொய்க்காத ஒளியும் குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய காந்தள் மலர்களாலாகிய தலைமாலை அவன் தலையில் விளங்கிநிற்கும்.

உலர்ந்த மயிரினையும், வரிசை மாறிய பற்களை யுடைய பிளவுபட்ட வாயினையும், சுழல்கின்ற விழியி னைக் கொண்ட பசிய கண்களையும், கண்டாரை வருத் தும் நோக்கத்தையும், கழன்ற கண்களையுடைய கோட்டானேடு கடுமையான பாம்பு அசைதலினுல் பெரிய முலைகளை வருத்தும் காதுகளையும், சுரசுரப் பான உடலையும், அச்சந்தரும் நடையினையும் உடைய பெண் பேய், உதிரத்தில் தோய்ந்த கூர்மையான நகத் தைக் கொண்ட தனது கொடிய விரல்களால் தோண்டி உண்ட மிக்க பிண நாற்றத்தை வீசும் கரிய தலையை,

ஒளி பொருந்திய தொடியையுடைய அகன்ற கையிலே ஏந்திக்கொண்டு, பிறர் அஞ்சும்படி வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் வெற்றி மிக்க போர்க்களத்தைப் பாடிக்கொண்டு, தோளை அசைத்துக்கொண்டு கொழுப் பைத் தின்னும் வாயையுடையவளாய்த் துணங்கைக் கூத்து ஆடும்படி, பூமியைச் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய கடல் கலங்க உள்ளே புகுந்து சூரபதுமனை அழித்த ஒளி பொருந்திய நீண்ட வேலையும், 'சூரன்', 'பதுமன்' என்னும் இரண்டு பெயர்களையுடைய வடிவினை யுடைய ஒரு பெரிய உடல் அற்று வேறுவேறாம்படி அச்சந் தோன்ற நெருங்கி, அசுருடைய நல்ல வலிமை கெடும்படி, கீழே கவிழ்ந்த கொத்துக்களையுடைய மாமர மாகிய முதலை வெட்டிய குற்றமற்ற வெற்றியையும், பிறரால் அடையமுடியாத நல்ல கீர்த்தியையும், உதிரம் படிந்திருத்தலால் சிவந்தவேலையும் உடையவன் முருகன்.

அத்தகைய பெருமானுடைய திருவடிகளை அடை தற்குரிய செய்கையை நீ விரும்பினையானால், பல நற் குணங்கள் சேர்ந்த நல்ல மனத்திலே உண்டான உன் இனிய விருப்பமானது கைகூடும்படி நீ நினைத்த செயலை இப்பொழுதே பெறுவாய்.

அங்ஙனம் அளித்தற்குரிய அவன், போரை விரும்பி உயர்த்திய மிக உயர்ந்த கொடிக்கருகே, வரிந்து அலங்கரிக்கப்பெற்ற பந்தினோடு பொம்மை அறுப்பா ரின்றித் தொங்கும்படி போர்செய்வாரை அழித்த காரணத்தால் போர்த்தொழில் இல்லாத மதில் வாயிலை யும், இலக்குமி வீற்றிருந்த குற்றமற்ற கடைத் தெருவையும், மாளிகைகள் மிக்க தெருக்களையும் உடைய

மதுரையின் மேற்கேயுள்ள, கருமையான சேற்றை யுடைய விசாலமான வயலிலே முறுக்கு நெகிழ்ந்து மலர்ந்த முள்ளையுடைய தாளைக்கொண்ட தாமரைப் பூவில் இராப்பொழுது தூங்கி, விடியற்காலையில் தேன் மணம் வீசும் நெய்தற் பூவை ஊதி, சூரியன் உதித்த உடனே கண்ணைப் போல மலர்ந்த அழகிய சுனைப் பூக் களிலே சென்று அழகிய வண்டின் கூட்டம் ஆரவாரிக் கும் திருப்பரங்குன்றத்து எழுந்தருளி இருத்தலும் உரியன். அதுவுமன்றி—

[illegible]

1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை

(1—5) உலகம் உவப்ப - உலகத்திலுள்ள உயிர்கள் மகிழும்படி, ஏர்பு-எழுந்து, வலன் திரிதரு- (மேருமலையை) வலமாகச் சுற்றிவரும், பலர் புகழ் ஞாயிறு - பலரும் புகழ்கின்ற சூரியனானவன், கடல் கண்ட ஆங்கு-கீழ்க்கடலிலே காணப்பட்டாற்போல, ஓவு அற-(இடை இடையே) நீங்குதல் இல்லாமல், இமைக்கும் - விளங்குகின்ற, சேண் விளங்கு - தூரத்தில் விளங்குகின்ற, அவிர் ஒளி - (நாற்றிசையும்) பரப்பும் ஒளியினையும், உறுநர் - (தன்னை வந்து) அடைந்த அடியவரை, தாங்கிய - ஏற்றுக்கொண்ட, மதன் உடை - அழகுள்ள, நோன் தாள் - வலிமை பொருந்திய பாதங்களையும், செறுநர் - பகைவர்களை, தேய்த்த - அழித்த, செல் உறழ் - இடிபோன்ற, தட கை - விசாலமான கையினையுமுடைய,

---

கண்ட+ஆங்கு=கண்டாங்கு. நிலைமொழியீற்று அகரம் தொக்குப் புணர்ந்தது. ஆங்கு அளபெடுத்துக் 'கண்டாஅங்கு' என நின்றது.

தன்னை வந்தடைந்தார் மிக்க தீவினை செய்தவராயினும், முருகன் தனது அடித்தாமரையில் சேர்த்துக்கொள்ளும் கருணை வள்ளலாதலின், "தாங்கிய...தாள்" என்றார். அன்பர் வேண்டும் அன்றே விரைந்து வந்து ஆட்கொள்வானாதலின், "தாங்கிய" என இறந்த காலத்தாற் கூறினார்.

மதன் - அழகு (சிறுபாண் 259).

தடக்கைக்குச் செல் (இடி) உவமையாயது, அதன் ஆற்றலால்.

அன்பரை ஆட்கொள்ளுதலும் கொடியவரை அழித்தலும் தலைவற்குக் கடமையாதலான், காத்தல் தொழிலையும் அழித்தல் தொழிலையும் உடன் கூறினார்.

மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்

(6—11) மறு இல் கற்பின்-குற்றமற்ற கற்பினையும், வாள் நுதல்-ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய தெய்வயானையின், கணவன் - தலைவனும், கார்கோள் - கடலிலே, முகந்த-முகந்ததனால் உண்டாகிய, கமம் - நிறைந்த, சூல் மா மழை - கருக்கொண்ட கருமையாகிய மேகங்கள், வாள் - சூரியனும் சந்திரனும், போழ் - (இருளைப்) பிளக்கின்ற [நீக்குகின்ற], விசும்பின் - ஆகாயத்திலே நின்று, வள் உறை சிதறி - பெரிய துளிகளைச் சிதறி, தலைப்பெயல் - முதன் மழையை, தலைஇய - பெய்துவிட்ட, தண் நறும் கானத்து - குளிர்ச்சி பொருந்திய வாசனையமைந்த காட்டிலே, இருள் பட - இருள் உண்டாகும்படி, பொதுளிய - தழைத்த, பராரை - பருத்த அடிப்பாகத்தினையுடைய, மராஅத்து - வெண் கடம்ப மரங்களின், உருள் பூ - உருண்ட பூக்களைக் கொண்ட, தண் தார் - குளிர்ச்சி பொருந்திய மாலையானது, புரளும் மார்பினன் - புரளப்பெற்ற மார்பையுடையவனும்,

---

வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி எனப் பொருள்படும் ; இத்தொடர் ஈண்டு அவ்வித நெற்றியை யுடைய தெய்வயானையைக் குறிக்கின்றது ; அன்மொழித்தொகை.

வாள் - ஒளி; இங்குச் சூரிய சந்திரர்க்கு ஆயிற்று ; ஆகுபெயர்.

பராரை - பருமை+அரை ; மை கெட்டுப் பருவரை எனப் புணர வேண்டுவது பராரை என மருவிற்று.

மராஅத்து-மரா+அத்து ; உருபு தொக்குச் சாரியை மாத்திரம் நின்றது.

மரா - வெண்கடம்ப மரம்.

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்

(12—18) மால் வரை-பெரிய மூங்கில்கள், நிவந்த-வளர்ந்துள்ள, சேண் உயர் வெற்பில் - மிகவும் உயர்ந்த மலைகளில், கிண்கிணி-'கிண்கிணி' என்னும் ஆபரணம், கவைஇய-சூழ்ந்துள்ள, ஒள் செஞ் சீறடி-ஒளி பொருந்திய செம்மையான சிறிய அடியினையும், கணை கால் - திரட்சி பெற்ற காலினையும், வாங்கிய - துவளுகின்ற, நுசுப்பின் - இடையினையும், பணை தோள் - மூங்கில் போலும் தோளினையும், கோபத்து அன்ன - இந்திரகோபப் பூச்சியின் நிறத்தைப் போன்ற, தோயா பூ துகில் - (சாயம்) தோயாத அழகிய புடைவையையும், பல் காசு - பல இரத்தினங்கள், நிரைத்த - வரிசையாகக் கோக்கப்பெற்ற, சில் காழ் - சில வடங்களைக் (கொண்ட), அல்குல் - அல்குலினையும், கை புனைந்து இயற்றா - ஒருவர் கையினால் அலங்கரித்தலைப் பெறாத, கவின் பெறு வனப்பின் - (இயற்கை) அழகினைப் பெற்ற அழகினையும், நாவலொடு பெயரிய - 'ஜாம்பூநதம்' என்னும் பெயரைக் கொண்ட, பொலம் புனை - பொன்னாற் செய்த, அவிர் இழை - ஒளி வீசும் அணியினையும்,

---

நிவந்த - வளர்ந்த ; நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த (சிறுபாண். 68).

தெய்வப் பெண்களின் அழகிய புடைவைகள் இறைவன் ஆணையால் சிவந்திருப்பன ஆதலின், 'தோயாப் பூந்துகில்' என்றார்.

பல்காசு நிரைத்த சில்காழ் - மேகலை; இஃது அல்குலுக்கு மேல் அடிவயிற்றில் அணியும் ஆபரணம் ; இவ்வாபரணம் துணிக்குள்ளே அணியப்படும்.

சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

(19—25) சேண் இகந்து விளங்கும்-நெடுந்தூரத்தையும் கடந்து விளங்குகின்ற, செயிர் தீர் மேனி - குற்றமற்ற உடல் நிறத்தையுமுடைய, சூர்அரமகளிர் [வரி 41]-(கண்டாரை) வருத்தும் தெய்வ மகளிர், பலர் உடன் - பலர் ஒன்று சேர்ந்து, துணையோர் - தாதியர், ஆய்ந்த - ஆராய்ந்த, இணை - (நுனிகள்) சமமான, ஈர் - பசப்புள்ள, ஓதி - கூந்தலில், செங்கால் வெட்சி - சிவந்த காம்பினைக் கொண்ட வெட்சி மலர்களினுடைய, சிறிதழ் - சிறிய இதழ்களின், இடை - நடுவில், பைந்தாள் குவளை - பசுமையான தாளினைக் கொண்ட குவளை மலரினுடைய, தூ இதழ் - பரிசுத்தமான இதழ்களை, கிள்ளி இடுபு - கிள்ளி இட்டு, தெய்வ உத்தியொடு - 'சீதேவி' என்னும் தலை ஆபாரணத்தோடு, வலம்புரி - 'வலம்புரி' என்னும் தலை ஆபாரணத்தையும், வயின் வைத்து - (தகுந்த) இடத்தில் வைத்து, திலகம் - பொட்டானது, தைஇய - அழகு செய்த, தேம் கமழ் - வாசனை வீசுகின்ற, திரு நுதல்-அழகிய நெற்றியில், மகரப் பகுவாய் - சுறாமீனின் பிளவுபட்ட வாய் (போலச் செய்த) ஆபாரணம், தாழ மண்ணுறுத்து - தொங்கும்படி அலங்கரித்து,

---

சீறிதழ் - சிறுமை+இதழ் ; நிலைமொழி மை கெட்டு முதல் நீண்டு வருமொழியொடு புணர்ந்தது.

தைஇய - அழகு செய்த (ஐங்குறு.)

மகரப் பகுவாய் - அன்மொழித் தொகை.

துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை

(26—33) துவர முடித்த - (செய்யவேண்டிய அலங்காரங்களை) முற்றிலும் செய்து முடித்த, துகள் அறும் உச்சி - குற்றமற்ற கொண்டையில், பெருந் தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த சண்பகப் பூக்களை, செரீஇ - செருகி, கருந் தகட்டு - கருமையாகிய புறஇதழ்களையும், உள் ஐ - அகத்திலே அழகிய (இதழ்களையுமுடைய), பூ - பூக்களைக்கொண்ட, மருதின் ஒள் இணர்-மருதமரத்தின் ஒளி பொருந்திய கொத்துக்களை, அட்டி - அதன்மேல் இட்டு, கிளை - (பச்சென்ற இலை அரும்புகளிலிருந்து) கிளைத்தலையுடையதாய், கவின்று - அழகு பெற்று, எழுதரு-தோன்றுகின்ற, கீழ்நீர்-அடியிலே நீரைக்கொண்ட, செவ்வரும்பு-செந்நிற அரும்புகளைக் கொண்டு, இணைப்பு உறு - கட்டுதல் பொருந்திய, பிணையல்-மாலையை, வளைஇ-வளைத்து, துணை தக - (இரண்டு காதுகளிலும்) ஒரே அளவினவாக, வள் காது - பெரிய காதுகளில், நிறைந்த - செருகப்பெற்ற, பிண்டி ஒள் தளிர் - அசோகமரத்தின் ஒளி பொருந்திய தளிர், நுண் பூண் ஆகம் - நுட்பமான வேலைப்பாடு அமைந்த ஆபரணங்களைக் கொண்ட மார்பிலே, திளைப்ப - அசைய, திண் காழ் - திண்ணிய வயிரத்தையுடைய, நறுங் குறடு உரிஞ்சிய - வாசனையுள்ள சந்தனக்கட்டையைத் தேய்த்ததனால் உண்டாகிய, பூ சேழ் தேய்வை - அழகிய நிறத்தையுடைய குழம்பை,

தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை

(34—41) தேம் கமழ் - வாசனை வீசுகின்ற, மருத இணர் கடுப்ப-மருதம்பூவை அப்பினாற்போல, கோங்கின் குவி முகிழ் - கோங்கினது குவிந்த அரும்பை (யொத்த), இள முலை கொட்டி-இளமுலைகளிலே அப்பி, விரி மலர் வேங்கை - (அந்த ஈரம் வாடுவதற்கு முன்னே) விரிந்த மலரையுடைய வேங்கைப்பூவினது, நுண் தாது அப்பி - நுண்ணிய மகரந்தப்பொடியை அவைகளின்மேல் அப்பி, காண் வர - (பின்னும்) அழகு தோன்றும்படி, வெள்ளில் குறு முறி - விளவினது சிறிய தளிரை, கிள்ளுபு தெறியா - (அவைகளின் மேல்) கிள்ளித் தூவி, கோழி ஓங்கிய - கோழியின் உருவு மேலே பொருந்திய, வென்று அடு - (பகைவரை வஞ்சியாது எதிர்நின்று) வென்று கொல்லும், விறல் கொடி - வலிமிக்க கொடி, வாழிய பெரிது என்று ஏத்தி - வாழ்வதாக நெடுங்காலம் என்று துதித்து, சீர் திகழ் - சிறப்பு மிக்க, சிலம்பகம் - மலையிடமெல்லாம், சிலம்ப - ஒலிக்க, பாடி ஆடும் சோலை - பாடி ஆடும் சோலையில்,

---

அடியையும், காலையும், நுசுப்பையும், தாளையும், துகிலையும், அல்குலையும், வனப்பையும், இழையையும், மேனியையும் உடைய சூர் அரமகளிர் ஆடும் சோலை எனக் கொள்க.

ஈண்டுச் சூரரமகளிர் தமக்குள்ளே அலங்கரித்துக்கொண்டனர் எனக் கொள்ளல்வேண்டும்.

மந்தியும் அறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கிற்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்குங் காதிற் பிணர்மோட்

(42—50) மந்தியும் அறியா - குரங்குகளும் (ஏறி) அறியாத, மரன் பயில் அடுக்கத்து - மரம் நெருங்கிய பக்க மலையிடத்து நின்ற, சுரும்பும் மூசா - வண்டுகளும் மொய்க்காத, சுடர் பூ காந்தள் - பிரகாசம் பொருந்திய காந்தள் மலர்களாலாகிய, பெருந்தண் கண்ணி - பெருமை பொருந்திய குளிர்ச்சி பொருந்திய தலை மாலையை, மிலைந்த சென்னியன் - அணிந்த தலையையுடையவனுமாகிய,

பார் முதிர் - பூமியைச் சூழ்ந்த, பனி கடல் - குளிர்ச்சி பொருந்திய கடல், கலங்க உள் புக்கு - கலங்கும்படி உள்ளே புகுந்து, சூர் முதல் தடிந்த - சூரபதுமனாகிய முதலை அழித்த, சுடர் இலை - பிரகாசம் பொருந்திய இலைவடிவமான, நெடு வேல் - நீண்ட வேலினைக் கொண்டு, - உலறிய கதுப்பின் - உலர்ந்த மயிரினையும், பிறழ் பல் - வரிசை மாறிய பற்களையுடைய, பேழ் வாய் - பிளவுபட்ட வாயினையும், சுழல் விழி - சுழல்கின்ற விழியினைக் கொண்ட, பசுங்கண் - பசுமையான கண்களையும், சூர்த்த நோக்கின் - (கண்டாரை) வருத்தும் நோக்கத்தினையும், கழல் கண் கூகையொடு - கழன்ற கண்களையுடைய கோட்டானோடு, கடும் பாம்பு - கடுமையான பாம்பு, தூங்க - அசைதலினால், பெரு முலை - பெரிய முலைகளை, அலைக்கும் காதின் - வருத்தும் காதுகளையும், பிணர் மோட்டு - சுரசுரப்பான உடலையும்,

---

மரன் - (மரம்) கடைப் போலி.

டுருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரல்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவி னொருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி

(51—58) உரு கெழு செலவின் - (கண்டார்க்கு) அச்சம் தரும் நடையினையுமுடைய, அஞ்சு வரு பேய் மகள்-(காண்பார்) அஞ்சும்படி வரும் பேய்ப் பெண்ணானவள், குருதி ஆடிய - உதிரத்தில் தோய்ந்த, கூர் உகிர்-கூர்மையான நகத்தைக் கொண்ட, கொடு விரல் - தனது கொடிய விரல்களால், கண் தொட்டு உண்ட - கண்களைத் தோண்டி உண்ட, கழி முடை கருந் தலை - மிக்க பிணநாற்றத்தை வீசும் கரிய தலையை, ஒள் தொடி - ஒளி பொருந்திய தொடி என்னும் ஆபரணத்தையுடைய, தட கையின் ஏந்தி - விசாலமான கையிலே ஏந்திக்கொண்டு, வெருவர - அஞ்சும்படி, வென்று அடு - (வஞ்சியாது எதிர்நின்று) வென்று கொல்லும், விறல் களம் - வெற்றிமிக்க போர்க்களத்தை, பாடி - பாடிக்கொண்டு, தோள் பெயரா - தோளை அசைத்துக்கொண்டு, நிணம் தின் வாயள் - கொழுப்பைத் தின்னும் வாயை உடையவளாய், துணங்கை தூங்க - துணங்கைக் கூத்து ஆடும்படி, இரு பேர் உருவின் - ('சூரன்', 'பதுமன்' என்னும்) இரண்டு பெயர்களையுடைய வடிவினையுடைய, ஒரு பேர் யாக்கை - ஒரு பெரிய உடல், அறு வேறு வகையின் - அற்று வேறு வேறாம்படி, அஞ்சு வர மண்டி - அச்சம் தோன்ற நெருங்கி,

---

துணங்கை - இருகைகளையும் முடக்கி அவற்றின் முழங்கைகளால் விலாப்பக்கங்களை அடித்துக்கொண்டு குதித்தாடும் ஒருவகைக் கூத்து: "முடக்கிய இருகை பழுப்புடை ஒற்றித், துடக்கிய நடையது துணங்கை யாகும்". இதனையே 'சிங்கியடித்தல்' என்பர்.

அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி

(59—67) அவுணர் நல் வலம் - அசுரருடைய நல்ல வலிமை, அடங்க - கெடும்படி, கவிழ் இணர் - (கீழே) கவிழ்ந்த கொத்துக்களை யுடைய, மா முதல் - மா மரமாகிய முதலை, தடிந்த - வெட்டிய, மறு இல் கொற்றத்து - குற்றமற்ற வெற்றியையும், எய்யா நல் இசை - (பிறரால்) அடையமுடியாத நல்ல கீர்த்தியையும், செவ்வேல் - (உதிரம் படிந்திருப்பதால்) சிவந்த வேலையுமுடைய, சேஎய் - முருகனது, சேவடி படரும் - செம்மையான திருவடிகளை அடைதற்குரிய, செம்மல் உள்ளமொடு-மேன்மையான மனத்தோடும்,நலம் புரி கொள்கை-(இம்மையில்) நன்மையைச் செய்கின்ற எண்ணத்தை உண்டாக்குவதாகிய மனஉறுதியோடும், புலம் புரிந்து உறையும் - வேறு நிலத்தை விரும்பி வாசம் செய்தற்குரிய, செலவு - செல்கையை, நீ நயந்தனை யாயின் - நீ விரும்பினையானால், பல உடன் - பல நற்குணங்கள் சேர்ந்த, நன்னர் நெஞ்சத்து - நல்ல மனத்திலே உண்டான, இன் நசை வாய்ப்ப - (உன்) இனிய விருப்பமானது கைகூடும்படி, நீ முன்னிய வினை - நீ நினைத்த செயலை, இன்னே பெறுதி - இப்பொழுதே அடைவாய், (அங்ஙனம் அளித்தற்குரிய அவன்) செரு புகன்று எடுத்த - போரை விரும்பி உயர்த்திய, சேண் உயர் நெடுங் கொடி - மிக உயர்ந்த கொடிக்கருகே, .

பேய்மகள் துணங்கை தூங்க மாமுதல் தடிந்த செவ்வேற் சேஎய் எனக் கூட்டுக.

வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்

(68—74) வரி புனை பந்தொடு - வரிந்து அலங்கரிக்கப்பட்ட பந்தினோடு, பாவை தூங்க - பொம்மையானது (அறுப்பார் இல்லாமல்) தொங்கும்படி, பொருநர் தேய்த்த - போர் செய்வாரை அழித்த காரணத்தால், போர் அரு வாயில் - போர்த்தொழில் இல்லாத மதில் வாயிலையும், திரு வீற்றிருந்த - இலக்குமிதேவி வீற்றிருந்த, தீது தீர் நியமத்து - குற்றமற்ற கடைத்தெருவையும், மாடம் மலி மறுகின் - மாளிகைகள் மிக்க தெருக்களையுமுடைய, கூடல் குடவயின் - மதுரையின் மேற்கேயுள்ள, இருஞ்சேற்று அகல் வயல் - கருமையாகிய சேற்றையுடைய விசாலமான வயலிலே, விரிந்து - முறுக்கு நெகிழ்ந்து, வாய் அவிழ்ந்த - மலர்ந்த, முள் தாள் தாமரை துஞ்சி - முள்ளையுடைய தாளைக்கொண்ட தாமரையின் பூவில் (இராப்பொழுது) தூங்கி, வைகறை கள் கமழ் நெய்தல் ஊதி - விடியற்காலையில் தேன்மணம் வீசும் நெய்தற் பூவை ஊதி, எல் பட - சூரியன் உதித்த உடனே,

---

பந்தும் பாவையுங் கொண்டு முற்காலத்தில் ஆடுவார் பெண்டிரே ; ஆகையால், போர்விருப்பமுடைய ஓரரசன் தன்னொடு போர் செய்ய வரும்படி தன் பகைவரை அழைக்கும் குறிப்பாகத் தன் மதிலின் வாயிலில் அவற்றைத் தொங்கவிட்டிருப்பன். அக்குறிப்பின் கருத்தாவது, 'உம்மைப் பெண்களாகவே யான் மதித்துள்ளேன். மற்று நீர் ஆடவராயின் இங்கு வந்து இவற்றை அறுத்தெறிந்துவிட்டு என்னொடு போர்செய்வீர்' என்பதாம்.

கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்குங்
குன்றமர்ந் துறைதலும் உரியன். அதாஅன்று,

(75—77) கண் போல் மலர்ந்த - கண்ணைப் போல மலர்ந்த, காமர் சுனை மலர் - அழகிய சுனைப் பூக்களிலே (சென்று), அம் சிறை வண்டின்-அழகிய சிறகுகளையுடைய வண்டின், அரி கணம் - அழகிய கூட்டம், ஒலிக்கும் - ஆரவாரிக்கும், குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - திருப்பரங்குன்றத்து எழுந்தருளி இருத்தலும் உரியன். அதாஅன்று - அதுவுமன்றி,

---

ஒளியையும் தாளையும் தடக்கையையும் உடைய தேய்வயானையின் கணவனும், தார்புரளும் மார்பினனும், கண்ணி மிலைந்த சென்னியனும் ஆகிய செவ்வேள்சேஎய் சேவடி படரும் செலவு நீ நயந்தனையாயின், முன்னிய வினை இன்னே பெறுதி. அச்சேஎய் கூடற் குடவயின் குன்று அமர்ந்து உறைதலும் உரியன் எனக் கூட்டுக.

2. திருச்சீரலைவாய்

(பொருட்சுருக்கம்)

[முருகப்பெருமான் யானைமீது அமர்ந்து ஆகாய வழியாகத் திருச்சீரலைவாய் அடைதலும் அவன் நிலையான குணமாம்.]

தாழ்ந்து தொங்கும் மணிகள் மாறிமாறி ஒலிக்கின்ற பக்கங்களையும், வேகமான நடையையும், எமனைப் போன்ற தடுக்க முடியாத வலிமையையும், காற்றுச் செல்வது போன்ற வேகத்தினையும் உடைய யானையின் மேல், செம்புள்ளிகளும் அங்குசம் குத்தியதாலுண்டாகிய ஆழ்ந்த தழும்புகளும் உள்ள அதன் நெற்றியில் நெற்றிப் பட்டத்தோடு வாடுதலில்லாத மாலை அசைய முருகப்பெருமான் ஏறிக்கொண்டு - தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்துவகையான உறுப்புக்களையுடைய, செய்யவேண்டும் தொழிலெல்லாம் செய்து முடிக்கப்பெற்ற கிரீடத்தோடு நிறத்தாலும் திறத்தாலும் ஒன்றோடொன்று மாறுபாடு மிகுந்த அழகிய இரத்தினங்கள் மின்னலைப்போன்ற ஒளியோடு தலைகளில் விளங்கவும், ஆகாயத்தில் விளங்குகின்ற சந்திரனைச் சூழ்ந்து நீங்காத நட்சத்திரங்களைப் போன்று ஒளியுடையனவாய் வேலைப்பாடு அமைந்த பொற்குண்டலங்கள் காதுகளில் அசைந்து விளங்கவும், கெடுதலில்லாத விரதங்களோடு கூடிய தமது தவத்தொழிலை முடிக்கின்ற பக்தர் மனத்திலே பொருந்திக் காட்சிதரும் ஒளியுள்ள நிறத்தையுடைய அவன் முகங்களில் ஒரு முகம், மிக்க இருள் பொருந்திய உலகம் குற்றமின்றி

விளங்கப் பல கிரணங்களை விரித்தது; ஒரு முகம் அன்பர் துதிசெய்ய அவர் விருப்பம் போல நடந்து அன்போடு மகிழ்ந்து வரம் கொடுத்தது; ஒரு முகம் மந்திர விதியின் முறை தவறாமல் பிராமணருடைய யாகங்களுக்குத் தீங்கு வாராதபடி நினைக்கும்; ஒரு முகம் மக்களுக்கு விளங்காத பொருள்களையெல்லாம் அவர்கள் உய்யும்படி ஆய்ந்து சந்திரனைப் போல எல்லாத் திசைகளையும் விளக்கும்; ஒருமுகம் பகைவரை அழித்து அவர் பிறர்மேல் சென்று செய்யும் போரையழித்துக் கறுவுதல் கொண்ட மனத்தோடு கள வேள்வியைச் செய்தது; ஒருமுகம் மென்மை பொருந்தியவளும் கொடி போன்ற இடையையுடையவளும் ஆகிய இளமை பொருந்திய வள்ளிநாயகியோடு சிரித்து விளையாடலை விரும்பிற்று. அவ்விதம் அந்த ஆறு முகங்களும் முறையாகச் செய்துவருதற்கேற்ப, முத்து மாலை தங்கிய அழகிய பெருமை பொருந்திய மார்பிலே உள்ள மூன்று ரேகைகள் தம்மளவு வரப்பெற்றனவும், வலிமையினால் படைக்கலங்களை எறிந்து பெரும்புகழ் நிறைந்தனவும், பகைவர் உடல்களைப் பிளந்து அவர் உயிரை வாங்குவனவும் ஆகிய உயர்ந்த தோள்களில் ஒரு கை எப்பொழுதும் ஆகாயத்திலே செல்லும் முறையினையுடைய முனிவர்கள் சூரிய உஷ்ணத்தால் தீங்குறா விதம் அவர்கட்குப் பாதுகாவலாக ஓங்கி நின்றது; ஒரு கை இடுப்பிலே பொருந்திற்று; ஒரு கை அழகு பொருந்திய துணியினையுடைய தொடையின்மீது கிடந்தது; ஒரு கை அங்குசத்தைச் செலுத்தி நிற்க, இரு கைகள் அழகிய கேடகத்தோடு வேலாயுதத்தைச் சுழற்

றின; ஒரு கை ஞானமுத்திரையாக மார்போடு பொருந்தி விளங்கிற்று; ஒரு கை மாலையோடு கிடந்தது; ஒரு கை தோளின் பக்கமாகக் கீழே விழுகின்ற 'தொடி' என்னும் அணியோடு மிகவும் மேலே சுழன்றது; ஒரு கை ஓசை இனிதாகத் தருகின்ற ஒலிக்கின்ற மணியை மாறி மாறி ஒலித்தது; ஒரு கை நீல நிறத்தையுடைய மேகத்திலிருந்து மிக்க நீர்த்துளியையுடைய மழையைப் பெய்வித்தது; ஒருகை பெருமை பொருந்திய தெய்வப்பெண்களுக்கு மணமாலையைச் சூட்டிற்று. அந்தப் பன்னிரண்டு கைகளும் தத்தமக்குரிய முறையிலே காரியங்களைச் செய்ய, ஆகாய துந்துபிகள் ஒலி செய்யவும், மிக்க வயிரம் பொருந்திய ஊது கொம்புகள் ஒலிக்கவும், தூய சங்குகள் முழங்கவும், வலிமையைக் கொண்ட இடி போன்று ஒலிக்கும் பேரிகைகள் ஒலிக்கவும், பல பொறிகளைக் கொண்ட மயில் வெற்றிக்கொடியிலிருந்து அகவவும் ஆகாய வழியாகச் சென்று, பெரியோரால் புகழப்பெற்ற மிக்க சிறப்பினையுடைய திருச்செந்தூரை அடைதலும் அவனுடைய என்றுமுள்ள தன்மையாம். அதுவுமல்லாமல்—

2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை

(78—86) வை நுதி-கூரிய நுனியையுடைய அங்குசம், பொருத-வெட்டின, வடு ஆழ் - தழும்புகள் ஆழ்ந்த, வரி நுதல்-செம்புள்ளிகள் அமைந்த நெற்றியில், வாடா மாலை - வாடுதலில்லாத கற்பக மாலையானது, ஓடையொடு - நெற்றிப் பட்டத்தோடு, துயல்வர-அசைய, படு மணி - தாழ்ந்து தொங்கும் மணிகள், இரட்டும் மருங்கின் - மாறிமாறி ஒலிக்கின்ற பக்கங்களையும், கடு நடை - விரைவான நடையையும், கூற்றத்து அன்ன - இயமனைப் போன்ற, மாற்ற அரு மொய்ம்பின் - தடுக்க முடியாத வலிமையையும், கால் கிளர்ந்த அன்ன - காற்றுச் செல்வது போன்ற (வேகத்தினையும் உடைய), வேழமேல் கொண்டு - யானையின்மேல் ஏறி, ஐ வேறு உருவின் - (தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும்) ஐந்து வெவ்வேறான உறுப்புக்களை உடைய, செய் வினை முற்றிய - செய்யவேண்டும் தொழில் எல்லாம் நிரம்பிய, முடியொடு விளங்கிய - கிரீடத்தோடு விளங்கிய, முரண் மிகு திரு மணி - (ஒன்றோடொன்று நிறத்தாலும், திறத்தாலும்) மாறுபாடு மிகுந்த அழகிய இரத்தினங்கள், மின் உறழ் - மின்னலைப் போன்ற, இமைப்பின் - ஒளியோடு, சென்னி பொற்ப - தலைகளில் விளங்கவும், நகை தாழ்பு - ஒளி தங்கி, துயல்வரூஉம் - அசைகின்ற, வகை அமை - தொழில் வகை அமைந்த, பொலம் குழை - பொன்னாலாகிய குண்டலங்கள்,

சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம் ஒருமுகம்
ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

(87—95) சேண் விளங்கு இயற்கை-ஆகாயத்தில் விளங்குகின்ற இயல்பையுடைய, வாள் மதி கவைஇ - ஒளியினையுடைய சந்திரனைச் சூழ்ந்து, அகலா மீனின் - நீங்காத நட்சத்திரங்களைப்போல, அவிர்வன இமைப்ப - விளங்குவனவாய் ஒளி செய்யவும், தா இல் கொள்கை - கெடுதல் இல்லாத விரதங்களோடு கூடிய, தம் தொழில் முடிமார் - தமது தவத்தொழிலை முடிக்கின்றவர்களுடைய, மனன் நேர்பு - மனத்திலே பொருந்தி, எழுதரு - தோன்றுகின்ற, வாள் நிறம் முகன் - ஒளியுள்ள நிறத்தையுடைய முகங்களில், ஒரு முகம் - ஒருமுகமானது, மா இருள் ஞாலம் - மிக்க இருள் பொருந்திய உலகம், மறு இன்றி வினங்க - குற்றம் இன்றி விளங்க, பல் கதிர் விரிந்தன்று - பல கிரணங்களை விரித்தது; ஒரு முகம் - மற்றொரு முகமானது, ஆர்வலர் ஏத்த - அன்பர் துதி செய்ய, அமர்ந்து இனிது ஒழுகி - விரும்பி இனிது நடந்து [அவர்கள் விருப்பம்போல நடந்து], காதலின் உவந்து - அன்போடு மகிழ்ந்து, வரம் கொடுத்தன்று - வரத்தைக் கொடுத்தது; ஒரு முகம் - வேறொரு முகமானது, மந்திர விதியின் மரபுளி வழாஅ - மந்திர விதியின் முறை தவறாமல்,

---

பொற்ப இமைப்ப (தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் மனத்தில்) எழுதரு முகன் (முகங்களில்) எனக் கூட்டுக.

மரபுளி : உளி - பகுதிப் பொருள் விகுதி.

அந்தணர் வேள்வியோர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகங்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்

(96—103) அந்தணர் வேள்வி - பிராமணர் யாகங்களுக்கு, ஓர்க்கும் - (தீங்கு வாராதபடி) நினைக்கும்; ஒரு முகம் - மற்றொரு முகமானது, எஞ்சிய பொருள்களை - மக்களுக்கு விளங்காத பொருள்களை எல்லாம், ஏம் உற நாடி - (அவர்கள்) உய்வு உற ஆய்ந்து கூறி, திங்கள் போல - சந்திரனைப் போல, திசை விளக்கும் - எல்லாத் திசைகளையும் ஞானத்தால் விளக்கும்; ஒரு முகம் - ஒரு முகமானது, செருநர் தேய்த்து - பகைவரை அழித்து, செல் சமம் முருக்கி - (அவர் பிறர்மேல்) சென்று செய்யும் போரைக் கெடுத்து, கறுவு கொள் - கறுவுதல் கொண்ட, நெஞ்சமொடு - மனத்தோடு, களம் வேட்டன்று - †களவேள்வியைச் செய்தது; ஒரு முகம் - வேறொரு முகமானது, குறவர் மட மகள் - குறவரது மென்மை பொருந்திய மகளாகிய, கொடி போல் நுசுப்பின் - கொடிபோன்ற இடுப்பினைக் கொண்ட, மடவரல் வள்ளியொடு - இளம் பெண்ணாகிய வள்ளிநாயகியோடு, நகை அமர்ந்தன்றே - சிரித்து விளையாடலை விரும்பிற்று; ஆங்கு - அவ்விதம், அ மூ இரு முகனும் - அந்த ஆறுமுகங்களும், முறை - முறையாக, நவின்று - எப்பொழுதும் செய்து, ஒழுகலின் - வருவதற்கேற்ப,

---

ஏமம் என்பது இடை குறைந்து ஏம் என நின்றது.

†களவேள்வி - பேய்கள் வயிறு ஆரப் பிணங்களை உண்ணுமாறு பகைவரைப் போர்க்களத்திற் கொன்று அழித்தல்.

ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய
அங்குசங் கடாவ ஒருகை இருகை [தொருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப ஒருகை

(104—111) ஆரம் தாழ்ந்த - முத்துமாலை தங்கிய, அம் பகட்டு மார்பில் - அழகிய பெருமை பொருந்திய மார்பிலேயுள்ள, செம்பொறி வாங்கிய - சிவந்த (மூன்று) ரேகைகள் நீண்டுள்ள, மொய்ம்பின் சுடர் விடுபு - வலிமையினால் படைக்கலங்களை எறிந்து, வண் புகழ் நிறைந்து - பெரும் புகழ் நிறைந்து, வசிந்து வாங்கு நிமிர் தோள் - (பகைவர் உடல்களைப்) பிளந்து (அவர் உயிரை) வாங்கும் உயர்ந்த தோள்களில், ஒரு கை - ஒரு கையானது, விண் செலல் மரபின் - (எப்பொழுதும்) ஆகாயத்திலேயே செல்லும் முறையினையுடைய, ஐயர்க்கு - முனிவர் கட்கு(ப் பாதுகாவலாக), ஏந்தியது - ஓங்கி நின்றது; ஒரு கை - மற்றொரு கை, உக்கம் சேர்த்தியது - இடுப்பிலே வைத்தது; ஒரு கை - வேறொரு கை, நலம் பெறு - அழகு பொருந்திய, கலிங்கத்து - துணியினையுடைய, குறங்கின்மிசை - தொடையின்மீது, அசைஇயது - கிடந்தது; ஒரு கை - ஒரு கை, அங்குசம் கடாவ - அங்குசத்தைச் செலுத்தி நிற்க, இரு கை - இரண்டு கைகள், ஐ இரு வட்டமொடு - அழகிய பெரிய கேடகத்தோடு, எஃகு வலம் திரிப்ப - வேலாயுதத்தைச் சுழற்ற, ஒரு கை - ஒரு கை,

---

செம்பொறி வாங்கிய தோள், வசிந்து வாங்கு தோள், நிமிர் தோள் எனக் கூட்டுக.

சுடர் - ஆகுபெயர்.

மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல

(112—120) மார்பொடு விளங்க - (ஞானமுத்திரையாக) மார்போடு பொருந்தி விளங்க, ஒரு கை - மற்றொரு கை, தாரொடு பொலிய - (தொங்கும்) மாலையோடு (கிடந்து) விளங்க, ஒரு கை - ஒரு கையானது, கீழ் வீழ் தொடியொடு - (உயர்த்தப்பட்டதால் தோளின் பக்கமாகக்) கீழே விழுகின்ற 'தொடி' என்னும் ஆபரணத்தோடு, மீமிசை கொட்ப - மிகவும் மேலே சுழல, ஒரு கை - மற்றொரு கையானது, பாடு இன் - ஓசை இனிதாகத் தருகின்ற, படு மணி - ஒலிக்கின்ற மணியை, இரட்ட - மாறி மாறி ஒலிக்க, ஒரு கை - ஒரு கையானது, நீல் நிற விசும்பின் - நீல நிறத்தையுடைய மேகத்திலிருந்து, மலி துளி பொழிய - மிக்க நீர்த்துளிகளையுடைய மழையைப் பெய்விக்க, ஒரு கை - மற்றொரு கையானது, வான் அரமகளிர்க்கு - பெருமை பொருந்திய தெய்வப் பெண்களுக்கு, வதுவை சூட்ட - மணமாலையைச் சூட்ட, ஆங்கு - அவ்விதம், அ பன்னிரு கையும் - அந்தப் பன்னிரண்டு கைகளும், பால் பட இயற்றி - (தத்தமக்குரிய) முறையிலே காரியங்களைச் செய்ய, அந்தரம் பல் இயம் - ஆகாய துந்துபிகள், கறங்க - ஒலி செய்ய, திண் காழ் வயிர் - மிக்க வயிரம் பொருந்திய கொம்புகள், எழுந்து இசைப்ப - மிகுந்து ஒலிக்க, வால் வளை ஞரல - தூய சங்குகள் முழங்க,

---

நீலம் என்பது நீல் எனக் கடை குறைந்து நின்றது.
இயற்றி - இயற்ற ; எச்சத்திரிபு.

உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே. அதாஅன்று,

(121—125) உரம் தலை கொண்ட - வலிமையைத் தன்னிடத்திலே கொண்ட, உரும் இடி முரசமொடு - ஆண் இடி (போன்று ஒலிக்கும்) பேரிகையின் ஒலியோடு, பல் பொறி மஞ்ஞை - பல புள்ளிகளையுடைய மயிலானது, வெல் கொடி அகவ - அவனது வெற்றிக் கொடியிலிருந்து ஒலி செய்ய, விசும்பு ஆறாக - ஆகாய மார்க்கமாக, விரை செலல் முன்னி - விரைவாகச் செல்லுதலை நினைத்து, உலகம் புகழ்ந்த - பெரியோர் புகழ்ந்த, ஓங்கு உயர் விழு சீர் - மிக்க சிறப்பினையுடைய, அலைவாய் சேறலும் - திருச்செந்தூரில் செல்லுதலும், நிலைஇய பண்பு - (அக்கடவுளுக்கு) என்றுமுள்ள தன்மையாம். அதாஅன்று - அதுவுமன்றி,

---

வாடாமாலை ஓடையொடு துயல்வர யானைமீது ஏறி விசும்பாறாக அலைவாய்ச் சேறலும் அவன் நிலைஇய பண்பே என முடிக்க.

3. திருஆவினன்குடி

(பொருட்சுருக்கம்)

மரவுரியால் ஆகிய உடையையுடையவரும், வலம்புரிச் சங்கைப் போன்ற வெண்மையான நரைத்த அழகிய முடியினையுடையவரும், குற்றமற்று விளங்கும் உருவத்தையுடையவரும், மான்தோலை அணிந்த சதை வற்றிய மார்பிலே விலா எலும்புகள் தோன்றி அசையும் உடலையுடையவரும், நல்ல பகல்கள் பல ஒன்று சேர நீங்கிய உணவையுடையவரும், பகைமையோடு நிலைத்த கோபத்தை ஒழித்த மனத்தையுடையவரும், கற்றோரும் சிறிதும் அறியாத அறிவையுடையவரும், படித்தவர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையவரும், ஆசையோடு மிக்க கோபத்தையும் நீக்கிய ஞானத்தையுடையவரும், துன்பம் சிறிதும் அறியாத இயல்பையுடையவரும் ஆகிய அறிவினையுடைய முனிவர் விருப்பமுற்று முன்னே சென்றனர்.

அம்முனிவர்க்குப் பின், பாலின் புகையை மொண்டு கொண்டது போன்ற குற்றமற்ற சுத்தமான உடையினையும், அரும்புகள் வாய் விரிந்த பூவாலாகிய மாலை சூழ்ந்த மார்பினையும், காதோடு ஒன்ற வைத்த செய்ய வேண்டிய வேலைப்பாடு செய்தமைத்த வார்க்கட்டையுடைய நல்ல யாழிலே பயின்ற காரணத்தால் அன்புடைய மனத்தினையும், இனிய மொழியையும் உடைய கந்தருவ பத்தராகிய ஆடவர் யாழின் இனிய நரம்புகளைத் தடவி வாசித்துக்கொண்டு நோய் இல்லாமல் பொருந்திய உடம்பையுடைய்வரும், மாமரத்தின்

விளங்குகின்ற தளிரைப் போன்ற நிறத்தையுடைய வரும், உரைகல்லில் பொன் உரைத்த வரிகளைப் போன்ற தேமலையுடையவரும் ஆகிய மேகலையை அணிந்த குற்றமற்ற தம் மனைவியரோடு குற்றமில்லாமல் விளங்கினர்.

அவர்களுக்குப் பின், விஷத்தோடு சேர்ந்த துவாரமுள்ள வெள்ளிய பற்களையும் நெருப்புப் போல மூச்சு விடுகின்ற, பார்ப்பவர்க்கு அச்சம் உண்டாக்கும் மிக்க வலியினையும் உடைய பாம்புகள் அழியும்படி அவற்றை அடிக்கும் பல வரிகளைக் கொண்ட வளைந்த சிறகுகளையுடைய கருடன் அழகாக எழுதப்பெற்ற நீண்ட கொடியினைக் கொண்ட திருமாலும், வெண்மையான ரிஷபக் கொடியை வலப்பக்கத்தில் உயர்த்தியவனும், பலராலும் புகழப்படுகின்ற வலிய தோளையுடையவனும், உமாதேவியை இடப்பக்கத்தே உடையவனும், இமைத்தலில்லாத மூன்று கண்களையுடையவனும் ஆகிய மூன்று மதில்களை அழித்த வலிமை மிக்க சிவபெருமானும், ஆயிரம் கண்களையும் நூறு யாகங்களை முடித்த வெற்றியினையும் ஐராவதம் என்னும் யானையினையும் உடைய செல்வம் மிக்க இந்திரனும், இன்பத்தைத் தருகின்ற உலகத்திலே வந்து, நெடுங்காலம் கெடுதலில்லாத ஆயுளையுடைய நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவனாகிய ஒருவன் நிமித்தம் தன்னைக் காணவும், முப்பத்து மூவருடனே பதினெட்டு வகையான உயர்ந்த நிலை பெற்ற தேவகணங்களும், வானில் நட்சத்திரங்கள் தோன்றினாற் போன்ற தோற்றத்தையுடையவர்களாயும், வானில் காற்றடித்தாற் போன்ற விரை

வான நடையினை உடையவர்களாயும், காற்றிலே நெருப்பு எழுந்தாற்போன்ற வன்மையுடையவர்களாயும், நெருப்பு உண்டாக இடி இடித்தாற் போன்ற குரலை யுடையவர்களாயும், மிக்க குறைபாட்டின் இடையே தாங்கள் அக்கடவுள் அருளைப் பெறும் முறையிலே அதனைக் கொள்ளும் பொருட்டு வானத்தில் வட்டமிட்டவர்களாய்க் கூட்டமாய் வந்து தன்னைக் காணவும், குற்றமற்ற கற்பையுடைய தெய்வநாயகியோடு சில தினங்கள் திருஆவினன்குடியாகிய பழனியிலே தங்கியிருத்தலையும் அக்கடவுள் தனக்கு உரிமையாக உடையன். அதுவுமல்லாமல்—

3. திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதும்
கற்றோ ரறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு

(126—134) சீரை - மரவுரியை, தைஇய - (சேர்த்துத்) தைத்த, உடுக்கையர் - உடையை உடையவரும், சீரொடு - அழகோடு, வலம்புரி புரையும் - வலம்புரிச் சங்கைப் போன்ற, வால் நரை முடியினர் - வெண்மையான நரைத்த முடியினை உடையவரும், மாசு அற இமைக்கும் - குற்றமற்று விளங்கும், உருவினர் - உருவத்தை உடையவரும், மானின் உரிவை - மானினுடைய தோலை, தைஇய - அணிந்த, ஊன் கெடு மார்பின் - சதை வற்றிய மார்பிலே, என்பு எழுந்து இயங்கும் - விலா எலும்புகள் தோன்றி அசையும், யாக்கையர் - உடலையுடையவரும், நன் பகல் பல - நல்ல பகல்கள் பல, உடன் கழிந்த - ஒன்று சேர நீங்கிய, உண்டியர் - உணவையுடையவரும், இகலொடு - பகைமையோடு, செற்றம் நீக்கிய - நிலைத்த கோபத்தை ஒழித்த, மனத்தினர் - மனத்தையுடையவரும், கற்றோர் யாவதும் அறியா - கற்றவரும் சிறிதும் அறியாத, அறிவினர் - அறிவை உடையவரும், கற்றோர்க்கு - படித்தவர்க்கு, தாம் வரம்பு ஆகிய - தாம் எல்லையாகிய, தலைமையர் - தலைமையையுடையவரும், காமமொடு - ஆசையோடு,

கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவது மறியா இயல்பினர் மேவாத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர

(135 - 142) கடுஞ் சினம் - மிக்க கோபத்தையும், கடிந்த காட்சியர் - நீக்கிய ஞானத்தையுடையவரும், இடும்பை யாவதும் - துன்பம் சிறிதும், அறியா - அறியாத, இயல்பினர் - இயல்பை உடையவரும் ஆகிய, துனி இல் - வெறுப்பில்லாத, காட்சி முனிவர் - அறிவினையுடைய முனிவர், மேவர-விருப்பமுற்று, முன் புக-முன்னே செல்ல,

புகை முகந்த அன்ன-(பாலின்) புகையை மொண்டுகொண்டது போன்ற, மாசு இல் - குற்றமற்ற, தூ உடை - சுத்தமான உடையினையும், முகை வாய் - மொட்டுகளினுடைய வாய், அவிழ்ந்த - விரிந்த (பூவாலாகிய), தகை சூழ் ஆகத்து - மாலை சூழ்ந்த மார்பினையும், செவி நேர்பு வைத்த-காதோடு ஒன்ற வைத்த, செய்வு உறு - செய்ய வேண்டிய வேலைப்பாடு செய்தமைத்த, திவவின் - வார்க்கட்டையுடைய, நல் யாழ் நவின்ற - நல்ல யாழிலே பயின்ற (காரணத்தால்), நயன்உடை நெஞ்சின் - அன்புடைய மனத்தினையும், மென் மொழி-இனிய மொழியையும் உடைய, மேவலர்-பக்தர் (ஆகிய கந்தருவ ஆண் மக்கள்), இன் நரம்பு - இனிய நரம்புகளை, உளர - தடவி வாசித்து,

---

'மேவல்வர' என்பது 'மேவர' என நின்றது; 'வர' என்பது எச்சத்திரிபு.

இவ்வடிகளால் ஆசிரியர் முனிவர் இலக்கணம் கூறினர்.

உடையையும், ஆகத்தையும், நெஞ்சையும், மொழியையும் உடைய மேவலர் என்றும், நல்யாழ் நவின்ற மேவலர் என்றும் கூட்டுக.

உளர - (உளரி) எச்சத்திரிபு.

நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு

(143—151) நோய் இன்று இயன்ற - நோய் இல்லாமல் பொருந்திய, யாக்கையர் - உடம்பையுடையவரும், மாவின் - மாமரத்தினுடைய, அவிர் தளிர் புரையும் - விளங்குகின்ற தளிரைப் போன்ற, மேனியர் - நிறத்தையுடையவரும், அவிர் தொறும் - விளங்குந்தோறும், பொன் உரை - பொன் உரைத்த வரிகளை, கடுக்கும் - போன்ற, திதலையர் - தேமலையுடையவரும் ஆகிய, இன் நகை - (கண்களுக்கு) இனிய ஒளியையுடைய, பருமம் தாங்கிய - மேகலையை அணிந்த, பணிந்து ஏந்து அல்குல் - (நடுவே) தாழ்ந்து பக்கங்கள் உயர்ந்த அல்குலினையுடைய, மாசு இல் மகளிரொடு - குற்றமற்ற (தம்) பெண்டிரோடு, மறு இன்றி விளங்க - குற்றமில்லாமல் விளங்க, கடுவொடு ஒடுங்கிய - விஷத்தோடு சேர்ந்த, தூம்பு உடை - துவாரமுள்ள, வால் எயிற்று - வெள்ளிய பற்களையும், அழல் என உயிர்க்கும் - நெருப்புப்போல மூச்சு விடுகின்ற, அஞ்சுவரு கடுந்திறல் - (பார்ப்பவர்க்கு) அச்சம் உண்டாக்கும் மிக்க வலியினையும் உடைய, பாம்புபட - பாம்புகள் அழியும்படி, புடைக்கும் - அடிக்கும், பல் வரி - பல வரிகளைக் கொண்ட, கொடுஞ்சிறை புள் - வளைந்த சிறகுகளையுடைய கருடன், அணி - அழகாக எழுதப்பெற்ற, நீள் கொடி செல்வனும் - நீண்ட கொடியினைக் கொண்ட திருமாலும், வெள் ஏறு - வெண்மையான ரிஷபக்கொடியை;

மேவலர் மாசில் மகளிரோடு விளங்க எனக் கூட்டுக.

வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

(152—160) வலவயின் - வலப்பக்கத்தில், உயரிய - உயர்த்திய, பலர் புகழ் திணி தோள் - பலராலும் புகழப்படுகின்ற வலிய தோளை யுடையவனும், உமை அமர்ந்து விளங்கும்-உமாதேவி இடப்பக்கத்தே பொருந்தி விளங்கப்பெற்றவனும், இமையா முக்கண் - இமைத்தலில்லாத மூன்று கண்களையுடையவனும் ஆகிய, மூவெயில் முருக்கிய - மூன்று மதில்களை அழித்த, முரண் மிகு செல்வனும் - வலிமை மிக்க சிவபெருமானும், நூற்றுப் பத்து அடுக்கிய-ஆயிரம், நாட்டத்து-கண்களையும், நூறு பல் வேள்வி-நூறாகிய பல யாகங்களை, முற்றிய-முடித்த, வென்று அடு கொற்றத்து - வென்று அழிக்கும் வெற்றியினையும் உடைய, ஈர் இரண்டு ஏந்திய மருப்பின் - நான்கு உயர்ந்த தந்தங்களையும், எழில் நடை-அழகிய நடையினையும் உடைய, தாழ் பெருந்தடக்கை - (பூமியளவு) தாழ்ந்த நீண்ட பருத்த துதிக்கையினை, உயர்த்த யானை - மேலே உயர்த்திய யானையினது, எருத்தம் ஏறிய - பிடரியில் ஏறி அமர்ந்த, திரு கிளர் செல்வனும் - செல்வம் மிக்க இந்திரனும், நால் பெருந்தெய்வத்து - (இந்திரன், யமன், வருணன், குபேரன் என்னும்) நான்கு பெருந் திக்குப்பாலர்களையுடையதும், நல் நகர் நிலைஇய - நல்ல நகரங்கள் பொருந்தியதும்,

---

திணிதோள், முக்கண் - இவை அன்மொழித் தொகைகள்.

நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்துச் செல்வன் என்றும், நூறுபல் வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்துச் செல்வன் என்றும், யானை எருத்தம் ஏறிய செல்வன் என்றும் கொள்க.

3

உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலின் தோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு

(161—167) உலகம் காக்கும் - உலகத்து உயிர்களைக் காக்கின்ற, ஒன்று புரி கொள்கை - ஒரு தொழிலையே செய்யும் கொள்கையையுடைய, பலர் புகழ் மூவரும் - பலராலும் புகழப்படுகின்ற (விஷ்ணு, சிவன், இந்திரன் ஆகிய) மூன்று பேரும், தலைவராக - முதன்மையானவராகப் பெற்றதும் ஆகிய, ஏம் உறு ஞாலந்தன்னில் தோன்றி - இன்பத்தைத் தருகின்ற உலகத்திலே வந்து, தாமரை பயந்த - (திருமாலினது உந்தித்) தாமரை அளித்த, தா இல் ஊழி - (நெடுங்காலம்) கெடுதல் இல்லாத ஆயுளையுடைய, நான்முக ஒருவன் சுட்டி - நான்கு முகங்களைக் கொண்ட (பிரமதேவனாகிய) ஒருவன் நிமித்தம், காண்வர - (தன்னை) வந்து காணவும், பகலின் தோன்றும் - சூரியனைப் போலக் காணப்படுகின்ற, இகல் இல் காட்சி - மாறுபாடில்லாத அறிவினையும், நால் வேறு இயற்கை - நான்கு வகையாக வேறுபட்ட இயல்பினையும் உடைய, பதினொரு மூவரொடு - *முப்பத்துமூவருடனே,

---

'காணவர' என்பது 'காண்வர' என நின்றது.

புள் அணி நீள்கொடிச் செல்வனும், மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும், திருக்கிளர் செல்வனும், ஞாலந்தன்னில் தோன்றி (த்தன்னை)க் காண்வர எனக் கூட்டுக.

*முப்பத்து மூவர் - ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என நால்வகையினர். அவருள் ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர்.

ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்

(168—174) ஒன்பதிற்று இரட்டி - பதினெட்டு வகையான, உயர் நிலை பெறீஇயர் - உயர்ந்த நிலைபெற்ற தேவகணங்களும், மீன் பூத்த அன்ன தோன்றலர் - (வானில்) நட்சத்திரங்கள் தோன்றினாற் போன்ற தோற்றத்தையுடையவராயும், மீன் சேர்பு-நட்சத்திரங்களுக்கு இடமாகிய வானிலே,வளி கிளர்ந்த அன்ன செலவினர் - காற்றடித்தாற் போன்ற நடையினை உடையராயும், வளியிடை - காற்றிலே, தீ எழுந்த அன்ன-நெருப்பு எழுந்தாற் போன்ற, திறலினர்-வன்மையுடையராயும், தீ பட - நெருப்பு உண்டாக, உரும் இடித்த அன்ன-இடி இடித்தாற்போன்ற, குரலினர் - குரலையுடையராயும், விழுமிய உறு குறை மருங்கின் - மிகவும் அதிகமான குறைபாட்டின் இடையே, தம் பெறு முறை கொண்மார் - (அக்கடவுளின் அருளைப் பெறுதற்குரிய) தமது முறையிலே அதனைக் கொள்ளும் பொருட்டு, அந்தரக் கொட்பினர் - வானத்தில் வட்டமிட்டவராய், வந்து உடன் காண - வந்து கூட்டமாகத் தன்னைக் காணும்படி,

---

பதினெண் கணங்கள்—(1) தேவர், (2) அசுரர், (3) தைத்தியர், (4) கருடர், (5) கின்னரர், (6) கிம்புருடர், (7) இயக்கர், (8) விஞ்சையர், (9) இராக்கதர், (10) கந்தருவர், (11) சித்தர், (12) சாரணர், (13) பூதர், (14) பைசாசகணம், (15) தாராகணம், (16) நாகர், (17) ஆகாயவாசிகள், (18) போக பூமியோர்.

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன். அதாஅன்று,

(175, 176) தா இல் கொள்கை - குற்ற மற்ற கற்பையுடைய, மடந்தையொடு - தெய்வநாயகியோடு, சில் நாள் - சில தினங்கள், ஆவினன்குடி - திருஆவினன்குடியாகிய பழனியிலே, அசைதலும் உரியன் - தங்கியிருத்தலையும் (அக்கடவுள்) உரியன், அதாஅன்று - அதுவுமல்லாமல்;

முனிவர்கள் முன்செல்ல, அவர்களுக்குப்பின் கந்தருவர் தம் மனைவியரோடு விளங்க, (அவர்களுக்குத் தலைமை பூண்டு) விஷ்ணு, சிவன், இந்திரன் மூவரும் பின்னே சென்று, பிரமன் விஷயமாகப் பூமியில் தோன்றித் தன்னைக் காணவும், அவர்கள் செல்லுதலை யுணர்ந்த முப்பத்துமூன்று தேவர்களும் பதினெட்டுக் கணங்களும் அப்பெருங்குறைக்கிடையே தத்தம் குறையினை முடித்துக்கொள்ள அவர்களோடுவந்து காணவும், திருஆவினன்குடியில் தெய்வயானை யோடு முருகன் தங்கியிருத்தலையும் உரியன்.

4. திருஏரகம்

(பொருட்சுருக்கம்)

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என ஆறுகப் பொருந்திய ஒழுக்கங்களில் வழுவாமல், தாய் வழியிலும் தந்தை வழியிலும் நன்கு மதிக்கப்பெற்ற பல வேறு விதமான பழைய குடிகளில் தோன்றி, இளமை பொருந்திய நாற்பத்தெட்டு நல்ல வருடங்களை நல்ல வழியில் கழித்தவரும், தருமத்தைக் கூறும் இயல்பினைக் கொண்டவரும், முத்தீச் செல்வத்தையுடையவரும் ஆகிய பிராமணர், தொழவேண்டும் காலத்தை அறிந்து துதி செய்யும் பொருட்டு மும்மூன்று இழைகளைக் கொண்ட மூன்று நூலுடன் உலராத துணியை உலரும்படி அணிந்துகொண்டு, உச்சியிலே குவித்த கையினராய், தன்னைப் புகழ்ந்து ஆறு எழுத்தாலாகிய 'நமோ குமாராய' என்னும் அரிய வேத மந்திரத்தை நாக்கு மாத்திரம் அசையும்படி பல முறை உச்சரித்து, வாசனை பொருந்திய மலர்களை ஏந்த, மிகவும் மகிழ்ந்து, திருஏரகத்தில் அம்முருகன் எழுந்தருளியிருத்தலையும் தனக்கு உரிமையாக உடையன். அதுவுமல்லாமல்—

4. திருஏரகம்

இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்

(177—181) இருமூன்று எய்திய-(ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல்,ஏற்றல் என) ஆறாகப் பொருந்திய, இயல்பினின்- ஒழுக்கங்களில், வழாஅது - வழுவாமல், இருவர் சுட்டிய - தாய் வழியிலும் தந்தை வழியிலும் நன்கு மதிக்கப்பெற்ற, பல் வேறு தொல் குடி - பல வேறு விதமான பழைய குடிகளில் தோன்றி,அறு நான்கு இரட்டி - நாற்பத்தெட்டான, இளமை நல் யாண்டு - இளமை பொருந்திய நல்ல வருடங்களை, ஆறினில் கழிப்பிய - (நல்ல) வழியில் கழித்த, அறன் நவில் கொள்கை - தருமத்தைக் கூறும் இயல்பினைக் கொண்ட, மூன்று வகை குறித்த - மூன்று வித வடிவமுடையதாகச் சொல்லப்பெற்ற, முத்தீ செல்வத்து - (ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்னும்) மூன்று தீயாகிய செல்வத்தையுடைய,

---

ஒருவன் தன் தாய் வழியில் ஏழு தலைமுறைக்குட்படாதவளும், தன் தகப்பன் கோத்திரத்திற் பிறவாதவளும் ஆகிய கன்னிகையைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்பது விதியாகலின், 'பல் வேறு தொல் குடி' என்றார்.

ஒன்பது அல்லது பதினெட்டு அல்லது முப்பத்தாறு ஆண்டுகள் பிரமசரியம் காத்தலினும் நாற்பத்தெட்டாண்டு காத்தல் சிறப்புடைமையின், " அறுநான்கு இரட்டி...ஆறினில் கழிப்பிய " என்றார்.

ஆறினில் - ஆற்றினில் என்பதன் விகாரம்.

ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்பன முறையே முற்காலத்தில் நாற்சதுரம், முச்சதுரம், வில் என்னும் வடிவாக அமைக்கப்பட்டனவாகலின், " மூன்று வகை குறித்த " என்றார். அன்றியும், அவை மூவுலகம், மூன்றாசிரமம், மூன்று வேதம் எனக் கூறப்படுதலின், அவ்வாறு கூறினார் என்றலுமாம். ஆசாரியர் ஆகவனீயமாகவும், தாய் தக்கிணாக்கினியாகவும், தந்தை காருகபத்தியமாகவும் கருதப்படுதலின், 'மூன்று வகை குறித்த' என்றார் எனலுமாம்.

இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலும் உரியன். அதாஅன்று,

(182—189) இரு பிறப்பாளர் - பிராமணர், பொழுது அறிந்து - (தொழ வேண்டும்) காலத்தை அறிந்து, நுவல - துதி செய்யும் பொருட்டு, ஒன்பது கொண்ட - ஒன்பது இழைகளைக்கொண்ட, மூன்று புரி நுண் ஞாண் - மூன்றுபுரியாக அமைந்த நுண்ணிய பூணூலுடன், புலரா காழகம் புலர உடீஇ - உலராத துணியை உலரும்படி உடுத்திக் கொண்டு, உச்சி கூப்பிய கையினர் - உச்சியிலே குவித்த கையினராய், தன் புகழ்ந்து - தன்னைப் புகழ்ந்து, ஆறு எழுத்து அடக்கிய - ஆறு எழுத்துக்களைக் கொண்ட, அருமறை கேள்வி - ('நமோ குமாராய' என்னும்) அரிய வேத மந்திரத்தை, நா இயல் மருங்கில் - நாக்கு (மாத்திரம்) அசையும்படி, நவில பாடி - பல முறையாக உச்சரித்து, விரை உறு நறுமலர் ஏந்தி - வாசனை பொருந்திய மலர்களை ஏந்த, பெரிது உவந்து - மிகவும் மகிழ்ந்து, ஏரகத்து உறைதலும் உரியன் - திரு ஏரகத்தில் (அம்முருகன்) எழுந்தருளி இருத்தலையும் உரியன். அதா அன்று - அதுவன்றி,

---

புரி என்பது மூன்று இழைகள் ஒன்றாக முறுக்கப்பெற்ற நூல். முப்புரி - மூன்று புரிகளை உடையது.

ஏந்தி - ஏந்த - எச்சத் திரிபு.

ஏரகம் என்பது மலைநாட்டுத் திருப்பதி என்பர் சிலர்; சுவாமி மலை என்பர் பிறர்.

5. குன்றுதோருடல்

(பொருட்சுருக்கம்)

மணமுள்ள சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பையுடையவரும், கொடுந்தொழிலைச் செய்யும் வலிய வில்லால் கொலைத் தொழிலைச் செய்தவரும் ஆகிய குறவர் நீண்ட மூங்கிற் குழாய்களில் இருந்து முற்றின தேனுலாகிய கள்ளின் தெளிவைக் குன்றினிடத்தே சிறிய ஊரிலுள்ள சுற்றத்தாரொடு அருந்தி இன்புற்றுத் 'தொண்டகம்' என்னும் சிறிய குறிஞ்சி வாத்தியத்தை அடித்துக் குரவைக்கூத்து ஆட, முருக பூசை செய்யும் வேலனுனவன், பச்சிலைக் கொடியால் சாதிக்காயை இடையே அமைத்து, தக்கோலக் காயைக் கலந்து காட்டு மல்லிகையோடு வெண் கூதாளப் பூவையும் சேர்த்துக் கட்டிய தலை மாலையையுடையவனுய்,—விரல் மலரச் செய்தலால் மலர்ந்த வேறுபடுகின்ற நல்ல மணங் கொண்ட, வண்டுகள் மொய்க்கப்பெற்ற பூக்களாலாகிய தலைமாலையையும், இதழ் பறித்துக் கட்டிய மாலையையும், சேர்த்துக் கட்டப்பெற்ற கூந்தலையும் பெற்று, கஞ்சங் குல்லையினையும், வெண் கடம்ப மரத்திடத்துள்ள வெண்மையான கொத்துக்களையும் சேர்த்து வண்டுகள் உண்ணும்படி கட்டப்பெற்ற குளிர்ந்த சிறந்த தழை களை அல்குலிலே அசையும்படி உடுத்து விளங்கிய பெண் களையும்,—சிவந்த மேனியனுய், சிவந்த ஆடையனுய், சிவந்த அடிப்பாகத்தையுடைய அசோக மரத்தின் குளிர்ச்சி பொருந்திய தளிர்கள் அசைகின்ற காதுகளை

யுடையவனுய், கச்சையையுடையவனுய், கழலே அணிந்த வனுய், வெட்சி மாலேயைச் சூடியவனுய், குழல் ஊதுப வனுய், கொம்பு ஊதுபவனுய், சிறிய பல வாத்தியங் களேயுடையவனுய், ஆட்டுக்கடாவையுடையவனுய், மயிலே யுடையவனுய், குற்றமற்ற சேவலே அழகிய கொடியி லுடையவனுய், உயரமானவனுய், 'தொடி' என்னும் அணி அமைந்த தோளேயுடையவனுய், இடுப்பில் நிலத் திலே படியும்படி கட்டிய நல்ல இனிய மென்மையை யுடைய துணியையுடையவனுய், யாழின் நரம்பு ஒலித் தது போன்ற இனிய குரலேயுடைய பெண்களேயும், மத் தளம் போன்ற தனது அகன்ற கையிலே பொருந்தும் படி ஏந்திக்கொண்டு அவர்களுள் மெல்லிய தோளே யுடைய பெண்மான் போன்ற பல பெண்களேத் தழுவி முதற் கை கொடுத்து ஒவ்வொரு குன்றிலும் ஆடுதலும் தன் நிலேநின்ற குணமாம்.

5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்

(190—198) வேலன் - (முருக பூசை செய்யும்) வேலனானவன், பைங்கொடி-பச்சிலைக் கொடியால், நறைக்காய் - சாதிக்காயை, இடை இடுபு-இடையே அமைத்து, அம் பொதி புட்டில் - அழகிய பொதிதலையுடைய தக்கோலக் காயை, விரைஇ - கலந்து, குளவியொடு - காட்டு மல்லிகையோடு, வெண் கூதாளம் - வெண் தாளியையும், தொடுத்த கண்ணியன் - கட்டிய தலைமாலையையுடையவனாய், நறுஞ் சாந்து அணிந்த - வாசனையுள்ள சந்தனத்தைப் பூசிய, கேழ் கிளர் மார்பின் - நிறம் விளங்கும் மார்பினையும், கொடுந்தொழில் வல் வில்- கொடுந்தொழிலைச் செய்யும் வலிய வில்லால், கொலைஇய கானவர் - கொலைத்தொழிலைச் செய்த குறவர், நீடு அமை விளைந்த-நீண்ட மூங்கிற் குழாய்களில் இருந்து முற்றின, தேன் கள் தேறல்-தேனாற்செய்த கள்ளின் தெளிவை, குன்றகம் சிறு குடி-குன்றினிடத்தே சிறிய ஊரிலுள்ள, கிளையுடன் மகிழ்ந்து - சுற்றத்தாரொடு இன்புற்று, தொண்டகம் சிறு பறை - 'தொண்டகம்' என்னும் சிறிய குறிஞ்சி வாத்தியத்தை (அடித்து), குரவை அயர - குரவைக் கூத்து ஆட, விரல் உளர்ப்பு அவிழ்ந்த - விரல் மலரச் செய்தலால் மலர்ந்த, வேறுபடு நறுங்கான் - வேறுபடுகின்ற நல்ல மணங் கொண்ட,

குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்

(199—206) குண்டு சுனை பூத்த - ஆழமாகிய சுனையில் தோன்றிய, வண்டு படு கண்ணி - வண்டுகள் மொய்க்கப்பெற்ற (பூக்களாலாகிய) தலை மாலையையும், இணைத்த - (இதழ் பறித்துக்) கட்டிய, கோதை - மாலையினையும், அணைத்த கூந்தல் - சேர்த்துக் கட்டப்பெற்ற கூந்தலினையும் (பெற்று), முடித்த குல்லை - (இலைகளை மேலே) கட்டிய கஞ்சங்குல்லையினையும், இலை உடை நறும்பூ - இலைகளை (இடையே) கொண்ட வாசனையுள்ள பூக்களைக் கொண்ட, செங்கால் மராஅத்த - நேரான அடிப் பாகத்தையுடைய வெண்கடப்ப மரத்திடத்துள்ள, வால் இணர் - வெண்மையான கொத்துக்களை, இடை இடுபு - நடுவே வைத்து; சுரும்பு உண தொடுத்த - வண்டுகள் உண்ணும்படி கட்டப்பெற்ற, பெருந்தண் மா தழை - பெரிய குளிர்ந்த சிறந்த தழைகளை, திருந்து காழ் - திருந்திய (மேகலை) வடங்கள் பொருந்திய, அல்குல் திளைப்ப உடீஇ - அல்குலிலே அசையும்படி உடுத்து (விளங்கிய), மயில் கண்ட அன்ன - மயில் நடையினைக் கண்டாற் போன்ற, மட நடை மகளிரொடு - மெல்லிய நடையினையுடைய பெண்களையும், செய்யன் - சிவந்த மேனியனாய், சிவந்த ஆடையன் - சிவந்த ஆடையையுடையவனாய், செவ்வரை - சிவந்த அடிப் பாகத்தையுடைய,

செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி

(207—215) செயலை தண் தளிர் - அசோக மரத்தின் குளிர்ச்சி பொருந்திய தளிர்கள், துயல்வரும் காதினன் - அசைகின்ற காதுகளையுடையவனாய், கச்சினன் - கச்சையை உடையவனாய், கழலினன் - கழலை அணிந்தவனாய், செச்சை கண்ணியன் - வெட்சி மாலையைச் சூடியவனாய், குழலன் - குழல் ஊதுபவனாய், கோட்டன் - கொம்பு ஊதுபவனாய், குறும் பல் இயத்தன் - சிறிய பல வாத்தியங்களை உடையவனாய், தகரன் - ஆட்டுக் கடாவையுடையவனாய், மஞ்ஞையன் - மயிலையுடையவனாய், புகர் இல் சேவல் - குற்றமற்ற சேவலை, அம் கொடியன் - அழகிய கொடியினுடையவனாய், நெடியன் - உயரமானவனாய், தொடி அணி தோளன் - 'தொடி' என்னும் அணி அமைந்த தோளையுடையவனாய், குறும்பொறி கொண்ட - சிறிய புள்ளிகளைக் கொண்ட, நறுந்தண் சாயல் - நல்ல இனிய மென்மையுடைய, மருங்கில் கட்டிய - இடுப்பில் கட்டிய, நிலன் நேர்பு துகிலினன் - நிலத்திலே படியும் துணியையுடையவனாய், நரம்பு ஆர்த்த அன்ன - (யாழின்) நரம்பு ஒலித்தது போன்ற, இன் குரல் தொகுதியொடு - இனிய குரலையுடைய (பெண்கள்) தொகுதியையும், முழவு உறழ் - மத்தளம்போன்ற, தட கையின் இயல ஏந்தி - தனது அகன்ற கையிலே பொருந்தும்படி ஏந்திக்கொண்டு,

மென்றோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே. அதாஅன்று,

(216, 217) மென்தோள் பல் பிணை - (அவர்களுள்) மெல்லிய தோளையுடைய பெண்மான் போன்ற பல பெண்களை, தழீஇ - தழுவி, தலைத்தந்து - *முதற்கை கொடுத்து, குன்றுதோறு ஆடலும் - ஒவ்வொரு குன்றிலும் ஆடுதலும், நின்ற தன் பண்பு - (எப்பொழுதும்) நிலைபெற்ற அவன் குணமாம்.

*முதற்கை கொடுத்தலாவது பல பெண்களைத் தன் கையால் இறுகத் தழுவி, தான் விரும்பும் பெண்களுள் அவர்களைத் தான் முதன்மையாகக் கருதுவதனை அவர்கட்கு வெளிப்படையாகக் காட்டுதல். இதனைத் 'தலைக்கை தருதல்' என்றும் கூறுவர்.

முருகனே வேலன் உடலில் நின்று ஆடல் புரிகின்றான் என்பது பக்தர் கொள்கையாதலின், வேலன் செய்கையை ஆசிரியர் முருகன் செய்கையாகக் கூறியுள்ளார்.

6. பழமுதிர்சோலை

(பொருட்சுருக்கம்)

சிறுதினையரிசியைப் பூக்களோடு கலந்து வைத்து, ஆட்டுக்குட்டியை அறுத்து, கோழிக் கொடியுடனே தன்னை இடந்தோறும் நிறுத்தி ஊரூர் கொண்ட சிறப்பு மிக்க திருவிழாவிலும், அன்பர் துதி செய்ய அத்துதி பால் தன் மனம் விரும்பிய இடங்களிலும், வேலன் அமைத்த வெறியாட்டுக் களத்திலும், காடுகளிலும், சோலைகளிலும், அழகு பெற்ற ஆற்றுத் திட்டுக்களிலும், ஆறுகளிலும், குளங்களிலும், வேறு பல இடங்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், புதிய பூக்களைக் கொண்ட கடம்ப மரத்திலும், ஊர்க்கு நடுவே பலர் கூடும் மரத்தடிகளிலும், பலர்க்கும் பொதுவான வேறிடங்களிலும், பசுக்கள் உராய்ந்து தினவு தீர்த்துக் கொள்ளும்பொருட்டு நாட்டிய கம்பங்களுள்ள இடங்களிலும், தனக்குரிய சிறப்புக்களை எல்லாம் செய்து தன்னைத் தேவராட்டி வருவித்த மலைக் கோயில்களிலும் முருகன் எழுந்தருளி இருத்தலும் யான் அறிந்த விதமாம்.

அந்தந்த இடங்களில் இருப்பினும் அல்லது வேறு இடங்களில் இருப்பினும், அவன் இருத்தற்குரிய இடத்தை நீ கண்ட உடனே அவனைக் காணுதற்குத் தகுதியாக முகம் விரும்பித் துதித்து, கையினால் தொழுது வாழ்த்தி, கால் பூமியில் பொருந்தும்படி வணங்கி, " கார்த்திகை முதலிய ஆறு பெண்கள் பெற்

றெடுத்த அறுமுகச் செல்வனே! கல்லால மரத்தின் அடியில் பொருந்திய சிவபெருமான்றன் புதல்வனே! பெரிய மூங்கில்களையுடைய பர்வதராஜன் மகளான பார்வதி தேவியின் குமாரனே! வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய துர்க்கையின் மகனே! மாரியம்மையின் குழந்தையே! தேவர்கள் வணங்கும் தலைவனே! வில் வீரர் சேனைக்குத் தலைவனே! மாலை பொருந்திய மார்பையுடையவனே! ஞான நூல்களை அறிந்த புலவனே! போரில் இணையற்றவனே! போர் செய்தலில் பலம் பொருந்திய இளைஞனே! அந்தணர் பெருஞ் செல்வமே! அறிவுடையோரின் புகழ் மலையே! வள்ளி நாயகி தெய்வநாயகி ஆகிய இருவரின் கணவனே! பகைவீரர்க்கெல்லாம் ஆண் சிங்கமே! முத்திச் செல்வனே! கிரவுஞ்ச மலையை அழித்த, குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனே! பலரும் புகழ்கின்ற நல்ல மொழியினைக் கொண்ட புலவருள் சிறந்தவனே! பெறுதற்கரிய மாபிலே பிறந்த புகழுடைய முருகனே! விரும்பினோர்க்கு அவர் விரும்பியவற்றைக் கொடுக்கும் இசை பேராளனே! வறுமையுற்றவர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கும் முருகனே! போர் பல வென்ற மார்பால் பரிசிலரைத் தாங்கும் நெடிய வேளே! பெரியோர் புகழும் பெரிய பெயரையுடைய கடவுளே! சூரபதுமனது குலத்தை வேரறுத்த வலிமையால் 'மதவலி' என்னும் பெயரைப் பெற்றவனே! போரில் மிக்க வீரனே! பெரியோனே!" என்று யான் அறிந்த அளவோடு நில்லாது புகழ்ந்து, "நின்னை அளந்து உணர்தல் நிலைபெற்ற உயிர்க்கு அருமையாதலினால் யான் உன்

திருவடிகளை நினைத்து வந்தேன். உன்னோடு ஒப்பாவார் இல்லாத ஞானமுடையவனே !" என்று நீ எண்ணியதைச் சொல்லுமுன்பே உன் விருப்பத்தைத் தங்கள் மனத்திற் கொண்டு உடனே பல வேறு உருவினையுடைய குறுகிய பல பூதங்கள் திருவிழா நடைபெறும் இடத்தே சிறப்பு மிகத் தோன்றி, "பெரியோய் ! நினது பெரும்புகழை விரும்பி வந்தவனாகிய அறிவு முதிர்ந்த சொற்களையுடைய இந்த யாசகன் நின் அருளுக்குரியவனே" என்று இனியனவற்றையும், நல்லனவற்றையும் மிகவும் பலவாறாக ஏத்தி நிற்க, அச்சம் மிகுந்த உயர்ந்த தன் உருவத்தினை உள்ளடக்கிக்கொண்டு, தனது மணம் வீசுகின்ற பழைய தெய்வத் தன்மையும் இளமையும் பொருந்திய அழகினை உனக்குக் காட்டி, "அச்சத்தை விட்டுவிடு. அறிவேன் நினது வருகையின் காரணத்தை" என்று அன்புள்ள நல்ல மொழிகளைப் பல முறை கூறி, வேறு வேறான பல வெள்ளைக் கொடிச்சீலையைப் போலப் பல பொருள்களோடு அசைந்து, அகில் கட்டைகளைச் சுமந்து, சந்தன மரங்களின் பெரிய அடிக் கட்டைகளை உருட்டி, சிறு மூங்கிலின் பூவையுடைய அசைகின்ற கிளைகள் கெட வேரைத் தோண்டி, ஆகாயத்தைத் தொடுகின்ற நீண்ட மூங்கில்களில் சூரியனைப்போலக் கட்டப்பெற்ற தேன் கூடு கெட, நல்ல பல 'ஆசினி' என்னும் பலாமரத்தின் முற்றிய சுளை கலந்துவர, மலைமேலுள்ள புன்னை மரங்களின் வாசனையையுடைய மலர் உதிர, கருங்குரங்குகளோடு கரிய முகத்தையுடைய 'முசு' என்னும் குரங்குகளின் ஆண்களும் வருந்த, செம்புள்ளிகளைக் கொண்ட நெற்றி

யையுடைய பெரிய பெண் யானைகள் குளிரால் நடுங்க, அலேகளை வீசி, பெரிய ஆண் யானைகளின் முத்துக்களை யுடைய பெரிய தந்தங்களை அடித்துக்கொண்டு,குதித்து, நல்ல பொன்மணியின் நிறம் விளங்கப் பொன்னைக் கொழித்துக்கொண்டு, வாழையின் பெரிய அடிமரங்கள் ஒடியவும், தென்னையின் இளநீர்க் குலேகள் உதிரவும் தாக்கி, மிளகுக்கொடிகளின் கருமையான கொத்துக்கள் சாயவும், பல மயில்களும் வலிமையுள்ள பெட்டைக் கோழிகளும் பயந்து நிலே கலங்கவும், ஆண் பன்றிக ளோடு கரடிகள் பெரிய மலேயின் பிளப்பாகிய குகை களில் ஒடுங்கவும், கரிய கொம்புகளையுடைய ' ஆமா ' என்னும் காட்டுப் பசுக்களின் அழகிய காளைகள் கத்த வும், வெகு தூரத்திலிருந்து இழும் என்னும் ஓசை யோடு இறங்கும் அருவியையுடைய, 'பழமுதிர் சோலே' என்னும் மலேக்கு உரிய முருகன், கடல் சூழ்ந்த உலகத்தில் ஒப்பற்றவனுகி நீ தோன்றும்படி,உனக்குப் பெறுதற்கரிய சிறந்த பரிசில் கொடுப்பன்.

6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்

(218—226) சிறு தினை மலரொடு விரைஇ-சிறுதினையரிசியைப் பூக்களோடு கலந்துவைத்து, மறி அறுத்து-ஆட்டுக்குட்டியை அறுத்து, வாரண கொடியொடு - கோழிக் கொடியுடனே, வயின்பட நிறீஇ - (தன்னை) இடந்தோறும் பொருந்த நிறுத்தி, ஊர் ஊர் கொண்ட - ஊர்தோறும் ஊர்தோறும் கொண்ட, சீர் கெழு விழவினும் - சிறப்பு மிக்க திருவிழாவிலும், ஆர்வலர் - அன்பர், ஏத்த - துதி செய்ய, மேவரு நிலையினும் - (அத்துதியால் தன் மனம்) விரும்பிய இடங்களிலும், வேலன் தைஇய - வேலன் அமைத்த, வெறி அயர் களனும் - வெறியாட்டுக் களத்திலும், காடும் காவும் கவின் பெறு துருத்தியும் - காடுகளிலும் சோலைகளிலும் அழகு பெற்ற ஆற்றுத் திட்டுக்களிலும், யாறும் குளனும் - ஆறுகளிலும் குளங்களிலும், வேறு பல் வைப்பும் - வேறு பல இடங்களிலும், சதுக்கமும் - நாற்சந்தியிலும், சந்தியும் - முச்சந்தியிலும், புது பூ கடம்பும் - புதிய பூக்களைக் கொண்ட கடம்ப மரத்திலும், மன்றமும் - ஊர்க்கு நடுவே பலர் கூடும் மரத்தடிகளிலும், பொதியிலும் - பலர்க்கும் பொதுவான வேறிடங்களிலும், கந்து உடை நிலையினும் - (பசுக்கள் உராய்ந்து தினவு தீர்த்துக்கொள்ளும்) கம்பங்களுள்ள இடங்களிலும்,

மாண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோ டையவி அப்பிஐ துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

(227—235) மாண் தலை கொடியொடு - மாட்சிமை பொருந்திய முதன்மை பெற்ற கோழிக்கொடியுடனே, அமைவர மண்ணி - பொருந்த அலங்கரித்து, நெய்யோடு ஐயவி அப்பி - நெய்யோடு வெண்கடுகையும் அப்பி, ஐது உரைத்து - (மந்திரத்தை) மெல்லச் சொல்லி, குடந்தம்பட்டு - குனிந்து (கை குவித்து) வணங்கி, கொழு மலர் சிதறி - வளப்பம் பொருந்திய மலர்களைச் சிதறி, முரண் கொள் உருவின் - ஒன்றோடொன்று வேறுபாடான நிறத்தையுடைய, இரண்டு - இரண்டு ஆடைகளை, உடன் உடீஇ - ஒன்றாக உடுத்து, செந்நூல் யாத்து - செந்நிற நூலைக் (கையிலே காப்புக்) கட்டி, வெண் பொரி சிதறி - வெள்ளைப் பொரியை இறைத்து, மத வலி நிலைஇய - மிக்க வலி பொருந்திய, மா தாள் கொழு விடை குருதியொடு - பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக் கடாவின் உதிரத்தோடு, விரைஇய - கலந்த, தூ வெள் அரிசி - சுத்தமான வெண்மையான அரிசியை, சில் பலி செய்து - சிறிய பலியாக இட்டு, பல் பிரப்பு இரீஇ - குறுணி அளவு கொண்ட பண்டங்களையுடைய பல கலங்களைப் பரப்பி வைத்து, சிறு பசு மஞ்சளொடு - சிறிய பசுமையான மஞ்சளோடு, நறு விரை தெளித்து - மிக்க வாசனை பொருந்திய பொருள்களையும் தெளித்து,

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்

(236 — 245) பெருந்தண் கணவீரம் - பெரிய குளிர்ச்சி அமைந்த செவ்வலரி மாலைகளை, துணை உற - அளவாக, அறுத்து தூங்க நாற்றி - அறுத்து அசையும்படி தொங்க விட்டு, நளி மலை சிலம்பின் - பெரிய மலைகளின் சாரலிலுள்ள, நல் நகர் வாழ்த்தி - நல்ல ஊரிலுள்ளவர்களை வாழ்த்தி, நறும் புகை எடுத்து - வாசனையுள்ள தூபத்தை இட்டு, குறிஞ்சி பாடி - குறிஞ்சி ராகத்தைப் பாடி, இமிழ் இசை அருவியொடு - மிகவும் ஓசை செய்கின்ற அருவியோடு, இன் இயம் கறங்க - இனிய வாத்தியங்களும் ஓசை செய்ய, உருவ பல் பூ தூஉய் - (சிவந்த) நிறமுள்ள பல பூக்களைத் தூவி, வெருவர குருதி செந்தினை பரப்பி - (பார்ப்பவர்) அஞ்சும்படி உதிரத்தோடு சேர்ந்த செந்தினையைப் பரப்பி வைத்து, குறமகள் - (தெய்வமாடும்) குறத்தி, முருகியம் நிறுத்து - 'முருகியம்' என்னும் வெறியாட்டுப்பறையை ஒலித்து, முரணினர் உட்க - பகைவர் அஞ்சும்படி, முருகு ஆற்றுப்படுத்த - முருகனை வருவித்த, உரு கெழு வியல் நகர் - அழகு பொருந்திய அகன்ற ஆலயத்திலுள்ள, ஆடு களம் சிலம்ப பாடி - வெறியாட்டுக்களம் ஒலி செய்யும்படி பாடி,

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினும் ஆக காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி

(246—252) கோடு - ஊது கொம்புகள், பல உடன் வாய் வைத்து - பல ஒன்று சேர வாயில் வைத்து ஊதி, கொடு மணி இயக்கி - கொடிய (ஓசையை உண்டாக்கும்) மணிகளை ஆட்டி, ஓடா - (பகைவர்க்குப் புறங்கொடுத்து) ஓடாத, பூட்கை - யானையையும், பிணிமுகம் - மயிலையும், வாழ்த்தி - புகழ்ந்து (நிற்கும் இடங்களிலும்), வேண்டுநர்-விரும்புபவர், வேண்டியாங்கு - விரும்பிய விதம், எய்தினர் வழிபட - அடைந்து வணங்க, ஆண்டு ஆண்டு - (மேலே கூறிய) அந்தந்த இடங்களில், உறைதலும் அறிந்த ஆறே - அவன் எழுந்தருளியிருத்தலும் (யான்) அறிந்த விதமாம்.

ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக - அந்த அந்த இடங்களில் இருப்பினும் சரி (அல்லது வேறு இடங்களில் இருந்தாலும் சரி), முந்து நீ கண்ட உழி - முதலில் (அவன் இருத்தற்குரிய இடத்தை) நீ கண்ட உடனே, காண் தக - (அவனைக்) காணுதற்குத் தகுதியாக, முகன் அமர்ந்து ஏத்தி - முகம் விரும்பித் துதித்து, கை தொழூஉ பரவி - கையினால் தொழுது வாழ்த்தி, கால் உற வணங்கி - கால் (பூமியில்) பொருந்தும்படி வணங்கி,

---

விழவு, நிலை, களன், காடு, கா, துருத்தி, யாறு, குளம், வைப்பு, சதுக்கம், சந்தி, கடம்பு, மன்றம், பொதியில், கந்துடை நிலை, வியன் நகர் ஆடுகளம் என்னும் இடங்களில் வேண்டுநர் வேண்டியாங்கு வழிபட ஆண்டாண்டு உறைதலும் அறிந்த ஆறு என முடிக்க.

நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ

(253—261) நெடும் பெருஞ் சிமையத்து - நீண்ட பெரிய (இமயமலையின்) உச்சியிலுள்ள, நீலம் பைஞ்சுனை - நீல நிறமான பசுமை பொருந்திய சுனையில், ஐவருள் ஒருவன் - (மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்களின்) ஐந்து தெய்வங்களில் ஒருவனாகிய அக்கினி தேவன், அம் கை ஏற்ப - (தன்) அழகிய கையில் கொள்ள, அறுவர் பயந்த - (அதனைப் பிறகு கார்த்திகை முதலிய) ஆறு பெண்கள் (உண்டு) பெற்றெடுத்த, ஆறு அமர் செல்வ - ஆறு வடிவங்கள் பொருந்திய செல்வனே, ஆல் கெழு கடவுள் புதல்வ - கல்லாலமரத்தின் அடியில் பொருந்திய சிவபெருமான்றன் புதல்வனே! மால் வரை - பெரிய மூங்கில்களையுடைய, மலை மகள் மகனே - பர்வதராஜன் மகளான பார்வதி தேவியின் குமாரனே! மாற்றோர் கூற்றே - பகைவர்களுக்கு யமனே! வெற்றி வேல் - வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய, போர் கொற்றவை சிறுவ - போரிற் சிறந்த துர்க்கையின் மகனே! இழை அணி சிறப்பின் - ஆபரணங்களை அணியும் சிறப்பினையுடைய, பழையோள் குழவி - மாரியம்மையின் குழந்தையே! வானோர் வணங்கு - தேவர்கள் வணங்கும், வில் தானை தலைவ - வில் வீரர் சேனைக்குத் தலைவனே! மாலை மார்ப - மாலை பொருந்திய மார்பையுடையவனே! நூல் அறி புலவ - ஞான நூல்களை அறிந்த புலவனே!

செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள

(262—270) செருவில் ஒருவ - போரில் இணையற்றவனே! பொரு விறல் மள்ள - போர் செய்தலில் பலம் பொருந்திய இளைஞனே! அந்தணர் வெறுக்கை - அந்தணர் பெருஞ்செல்வமே! அறிந்தோர் சொல் மலை - அறிவுடையோரின் புகழ் மலையே! மங்கையர் கணவ - வள்ளிநாயகி தெய்வநாயகி ஆகிய இருவரின் கணவனே! மைந்தர் ஏறே - (பகை) வீரர்க்கெல்லாம் ஆண் சிங்கமே, வேல் கெழு தட கை - வேலாயுதம் பொருந்திய அகன்ற கைகளையுடைய, சால் பெருஞ்செல்வ - நிறைந்த பெருமை பெற்ற (முத்திச்) செல்வனே! குன்றம் கொன்ற - கிரவுஞ்ச மலையை அழித்த, குன்றா கொற்றத்து - குறைவுபடாத வெற்றியினையுடைய, விண் பொரு - ஆகாயத்தைத் தாக்குகின்ற, நெடுவரை - நீண்ட மலைகளையுடைய, குறிஞ்சி கிழவ - குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனே! பலர் புகழ் நல் மொழி - பலரும் புகழ்கின்ற நல்ல மொழியினைக் கொண்ட, புலவர் ஏறே - புலவருள் சிறந்தவனே! பெறல் அருமரபின் - பெறுதற்கு அருமையான மரபிலே பிறந்த, பெரும்பெயர் முருக - பெரிய பெயரினையுடைய முருகனே! நசையுநர்க்கு - விரும்பினோர்க்கு, ஆர்த்தும் - (அவர் விரும்பியவற்றைக்) கொடுக்கும், இசை பேர் ஆள - கீர்த்தியாகிய பேரை ஆள்பவனே!

அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோயெனக்

(271—280) அலந்தோர்க்கு - வறுமையுற்றவர்க்கு, அளிக்கும் - (வேண்டுவனவற்றைக்) கொடுக்கும், பொலம் பூண் சேஎய் - பொன்னால் ஆகிய ஆபரணத்தையுடைய முருகனே, மண்டு அமர் கடந்த - நெருங்கி எதிர் நின்று செய்கின்ற போர் பல வென்ற, நின் - நினது, வென்று ஆடு அகலத்து - வென்று கொல்லுதலைச் செய்யும் மார்பால், பரிசிலர் தாங்கும் - பரிசிலரைத் தாங்கும், உரு கெழு நெடு வேஎள் (பகைவர்க்கு) அச்சம் மிக்க நெடிய வேளே! பெரியோர் ஏத்தும் - பெரியோர் புகழும், பெரும்பெயர் இயவுள் - பெரிய பெயரையுடைய கடவுளே! சூர் மருங்கு அறுத்த - சூரபதுமனது குலத்தை வேரறுத்த, மொய்ம்பின் மதவலி - வலிமையால் 'மதவலி' என்னும் பெயரைப் பெற்றவனே! போர் மிகு பொருந - போரில் மிக்க வீரனே! குரிசில் - பெரியோனே! என பல யான் அறி அளவையின் ஆனாது - என்று பல நான் அறிந்த அளவோடு நில்லாது, ஏத்தி - புகழ்ந்து, நின் அளந்து அறிதல் - நின்னை அளந்து உணர்தல், மன் உயிர்க்கு அருமையின் - நிலைபெற்ற உயிர்க்கு அருமையாதலினால், நின் அடி உள்ளி வந்தனன் - உனது திருவடிகளை நினைத்து வந்தேன். நின்னொடு புரையுநர் - உன்னோடு ஒப்பாவார், இல்லா புலமையோய் என - இல்லாத ஞானமுடையவனே என்று,

குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி

(281—290) குறித்தது - (நீ) எண்ணியதை, மொழியா அளவையில் - சொல்லாத அளவிலேயே, குறித்து - (உன் விருப்பத்தைத் தம்) மனத்திற் கொண்டு, உடன் - உடனே, பல் வேறு உருவின் - பல வேறு உருவினையுடைய, குறும்பல் கூளியர் - குறுகிய பல பூதங்கள், சாறு அயர் களத்து - திருவிழா நடைபெறும் இடத்தே, வீறு பெற தோன்றி - சிறப்பு மிகத் தோன்றி, நின் வண் புகழ் நயந்து வந்தோன் - நினது பெரும்புகழை விரும்பி வந்தவனாகிய, முது வாய் இரவலன் - அறிவு முதிர்ந்த சொற்களையுடைய இந்த யாசகன், பெரும - பெரியோய்! அளியன் தானே - (நின்) அருளுக்குரியவனே, என - என்று, இனியவும் நல்லவும் - இனியனவற்றையும் நல்லனவற்றையும், நனி பல ஏத்தி - மிகவும் பலவாறாக ஏத்தி (நிற்க), தெய்வம் சான்ற - தெய்வத்தன்மை மிக்க, திறல் விளங்கு உருவின் - திறமை விளங்குகின்ற உருவத்தினுடைய, வான் தோய் நிவப்பின் - ஆகாயத்தைத் தொடும் உயர்ச்சியைக் கொண்டு, தான் வந்து எய்தி - தான் வந்தடைந்து, அணங்கு சால் உயர்நிலை - அச்சம் மிகுந்த உயர்ந்த (தன்) உருவத்தினை, தழீஇ - உள்ளடக்கிக்கொண்டு, பண்டை தன் மணம் கமழ் தெய்வத்து - பழைய தனது மணம் வீசுகின்ற தெய்வத் தன்மை பொருந்திய, இள நலம் காட்டி - இளமை பொருந்திய அழகினை உனக்குக் காட்டி,

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்
றிருள்நிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்
தார முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு

(291—298) அஞ்சல் ஓம்புமதி - அச்சத்தை விட்டுவிடு, அறிவல் நின் வரவு என - அறிவேன் நினது வருகையின் காரணத்தை என்று, அன்புடை நல் மொழி அளைஇ - அன்புள்ள நல்ல மொழிகளைப் பல முறை கூறி, விளிவு இன்று - கேடு இல்லாமல், இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து - கருமை நிறம் பொருந்திய கடல் சூழ்ந்துள்ள உலகத்தில், ஒரு நீ ஆகி தோன்ற - ஒப்பற்றவன் நீ ஆகித் தோன்ற, விழுமிய - சிறந்த, பெறல் அரும்பரிசில் நல்குமதி - பெறுதற்கு அருமையாகிய பரிசில் கொடுப்பான்.

பலவுடன் - பல பொருள்களோடு, வேறு - வேறு வேறான, பல் துகிலின் - பல (வெள்ளைக் கொடிச்) சீலையைப்போல், நுடங்கி - அசைந்து, அகில் சுமந்து - அகில் கட்டைகளைச் சுமந்துகொண்டு, ஆரம் - சந்தன மரங்களின், முழு முதல் - பெரிய அடிக்கட்டைகளை. உருட்டி - உருட்டிக்கொண்டு, வேரல் - சிறு மூங்கிலின், பூ உடை அலங்கு சினை - பூவையுடைய அசைகின்ற கிளைகள், புலம்ப - வருந்த [கெட], வேர் கீண்டு - வேரைத் தோண்டி,

---

ஓம்புமதி - மதி - முன்னிலை அசை.

வரவு - ஆகுபெயர்.

முந்நீர் - ஆக்கல், அழித்தல், காத்தல் என்னும் மூன்று தன்மையையுடையது.

நல்குமதி - மதி - அசை.

விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்

(299—308) விண் பொரு - ஆகாயத்தை மோதுகின்ற, நெடு வரை - நீண்ட மூங்கில்களில், பரிதியின் தொடுத்த - சூரியனைப் போலக் கட்டப்பெற்ற, தண் கமழ் அலர் - குளிர்ச்சி பொருந்திய வாசனை வீசும் மலர்களிலிருந்து (எடுக்கப் பெற்ற), இறால் சிதைய - தேன் கூடு கெட, நன் பல - நல்ல பல, ஆசினி முது சுளை கலாவ - 'ஆசினி' என்னும் பலா மரத்தின் முற்றிய சுளை கலந்து வர, மீமிசை - (மலை) மேலுள்ள, நாகம் - புன்னை மரங்களின், நறுமலர் - வாசனையையுடைய மலர், உதிர - சிந்த, யூகமொடு - கருங்குரங்குகளோடு, மா முக முசு கலை பனிப்ப - கரிய முகத்தையுடைய 'முசு' என்னும் குரங்குகளின் ஆண்களும் வருந்த, பூ நுதல் - செம்புள்ளிகளைக்கொண்ட நெற்றியையுடைய, இரும்பிடி குளிர்ப்ப-பெரிய பெண் யானைகள் குளிரால் நடுங்க, வீசி - அலைகளை வீசி, பெருங்களிற்று - பெரிய ஆண் யானைகளின், முத்துடை வான் கோடு தழீஇ - முத்துக்களையுடைய பெரிய கொம்புகளை அடித்துக்கொண்டு, தத்துற்று - குதித்து, நன் பொன் மணி நிறம் கிளர - நல்ல பொன் மணி நிறமானது விளங்க, பொன் கொழியா - பொன்னைக் கொழித்துக்கொண்டு, வாழை முழு முதல் - வாழையின் பெரிய அடி மரங்கள், துமிய - ஒடிய, தாழை - தென்னையின், இளநீர் விழு குலை உதிர தாக்கி - பெரிய இளநீர்க் குலைகள் உதிரும்படி தாக்கி,

கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

(309—317) கறி கொடி - மிளகுக் கொடிகளின், கருந்துணர் சாய - கருமையான கொத்துக்கள் சாய, பொறி புற மட நடை - புள்ளிகளைப் புறத்திலே உடைய மெல்லிய நடையினையுடைய, மஞ்ஞை பலவுடன்-மயில் பலவற்றோடு, கோழி வய பெடை - கோழியினுடைய வலிமையுள்ள பெட்டைகள், வெரீஇ - பயந்து, இரிய - நிலை கலங்க, கேழலோடு - ஆண் பன்றிகளோடு, இரும்பனை - கரிய பனையாகிய, வெளிற்றின் - வயிரமில்லாத மரத்தின், புன்சாய் அன்ன - சிறிய சிலாம்பு போன்ற, குரூஉ மயிர்-கரு நிறத்தையுடைய மயிரினையுடைய, குடா அடி - வளைந்த அடிகளையுடைய, உளியம் - கரடிகள்,பெருங்கல் விடர் அளை செறிய-பெரிய மலையின் பிளப்பாகிய குகைகளில் ஒடுங்க, கருங் கோட்டு ஆமா நல் ஏறு - கருமையாகிய கொம்புகளையுடைய ‘ஆமா’ என்னும் காட்டுப் பசுவின் நல்ல ஆண்கள், சிலைப்ப - கத்த, சேண் நின்று-வெகு தொலைவிலிருந்து, இழும் என - இழும் என்னும் ஓசையோடு, இழிதரும் அருவி - இறங்கும் அருவியையுடைய, பழமுதிர்சோலை - பழமுதிர்சோலை என்னும், மலை கிழவோன் - மலைக்கு உரிய முருகன்.

பழமுதிர் சோலை மலை கிழவோன் பெறலரும்பரிசில் நல்கும் என முடிக்க. கிழவோனே - ஏ, அசை. உரையில் பொருள் எழுதாது விடப்பட்ட ஏகாரங்கட்கும் இக்குறிப்பே கொள்க.

திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார்

இயற்றிய நூல்கள்

		அணா
1.	திருக்கோவையார் இயல்பு	5
2.	மலர் வனம்	5
3.	திருமுருகாற்றுப்படை— பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்	5
4.	அரிசிங்கு	5
5.	மேக தூதம்	3
6.	பல்வகைக் கட்டுரைகள்	14
7.	பாலைக்கலி—பதவுரை (அச்சில்)	

Sadhu Press, Royapettah, Madras.